உ

# அருள் ஒளி



இதழ் 150

மாசி 2021

## மகாசிவராத்திரி
## சிறப்பு மலர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



## அமரர் இராசு இந்திரகுமார்

**தோற்றம் 31-07-1959** **மறைவு 25-02-2021**

முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக தேவஸ்தானத்தின் ஆஸ்தான நாதஸ்வர வித்துவானாகப் பணியாற்றிய அமரர் இராசு இந்திரகுமார் அவர்களின் ஆத்மா துர்க்காதேவியின் திருவடி நீழலில் நித்திய பேரானந்தப் பெருவாழ்வு பெற பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை.
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)



ஆசிரியர்

**கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்

**திரு. ப. சேயோன் அவர்கள்**

**வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, இலங்கை.**

**மாசி - 2021 மாதமலர்**

e.mail: thurkaiammantemple@gmil.com

face book: @tellidurga

**பதிவு இல: ISSN 2362 - 0587**

**ISBN 978 - 955 - 23 - 0019 - 3**

## உலக தாய் மொழி தினம்

தமிழ் மக்கள் தங்கள் தாய் மொழியை நன்கு நேசிக்க வேண்டும். செம்மொழியாகிய தமிழ் மொழியை ஈழ நாட்டில் சீரிய முறையில் பாதுகாக்க வேண்டியது தலையாய கடமையாகும். தமிழ் மொழி வளர வேண்டுமானால் தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்களை மக்கள் கற்க வேண்டும். பக்தி இலக்கியங்களை புறம் தள்ளி விட்டு தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி எவரும் சிந்திக்க முடியாது. இன்று பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பக்தி இலக்கியம் தொடர்பாக அறியும் ஆவல் மிகக் குறைந்து கொண்டு போகின்றது. பிற மதத்தவர்கள் நவீனத்துவம் என்ற பெயரில் மதம் சாராத தமிழ் இலக்கியங்களுக்கு முதன்மை கொடுக்க புறப்பட்டுவிட்டார்கள். இந்த வகையில் பல தமிழ் அறிஞர்கள் அகப்பட்டுவிட்டார்கள். இதன் ஆபத்தை இன்று நாம் உணரலாம். பாடவிதானங்களில் பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் பக்தி இலக்கியம் பற்றிய விரிவாக்கம் மிகவும் அவசியமாகும். இஸ்லாமிய இலக்கியம் கிறிஸ்தவ இலக்கியம் மதம் சாராத இலக்கியம் பட்டப்படிப்பில் ஆராய்வதற்கு வாய்ப்புக் கொடுத்துள்ளார்கள். இவை தவறல்ல இவையெல்லாம் தமிழில் இடை புகுந்தவை. இரண்டாயிரம் ஆண்டு பழமைவாய்ந்த மொழியாக விளங்கும் தமிழ் மொழிக்கு பக்தி இலக்கியங்களே கவசமாக உள்ளன. பன்னிரு திருமுறை, நாலாயிர திவ்யபிரபந்தம், புராண, இதிகாசங்கள், சைவசித்தாந்த தத்துவங்கள் தமிழுக்கு அணிகளன்களாக உள்ளன. திருக்குறள், ஐம்பெரும் காப்பியம் என்பவற்றை ஆழமாக கற்பவர்கள் அருகி வருகிறார்கள். அன்று பண்டிதர்கள், புலவர்கள், வித்துவான்கள் தமிழ் மொழியை ஆழமாக கற்று வளர்த்தார்கள். இன்று தமிழ் பட்டதாரிகள் அதிகமாக காணப்பட்ட போதிலும் பழந்தமிழ் நூல்களை ஆழமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதில்லை. இன் நிலையில் எங்கள் மத்தியில் தாய்மொழியாகிய தமிழ் மொழி விருத்தி குன்றிக் கொண்டு செல்வது வேதனை தரும் செய்தி ஆகும். உலகம் முழுவதும் பெப்ரவரி மாதம் 21ம் திகதி தாய் மொழி தினம் கொண்டாடும் வேளை நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழர்கள் தமிழில் கையெழுத்து வைப்பதே குறைந்து செல்கின்றது. தங்கள் பிள்ளைகளுக்கு தமிழில் பெயர் வைப்பதில்லை தமிழ் வாணிப நிலையங்கள் தமிழில் பெயர் வைப்பதில்லை. இதைவிட பாலர் பாடசாலை முதல் ஆங்கில மொழி மூலம் பிள்ளைகளை கற்பிக்க வேண்டும் என பலர் அவா கொள்கின்றார்கள். தமிழ் மொழியை பிற மொழி சார்ந்தவர்கள் அழிக்காமலே தமிழ்மொழி தமிழர்களால் ஒதுக்கப்படுவது தொடருமேயானால் என்னவாகும். தமிழை நேசிப்பதற்கு கடவுள் தான் வழி விட வேண்டும்.

## நல்லைக் கந்தசுவாமி வாழி விருத்தம்

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதனம்
ஆறுமரு தினமும் வாழி,
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
அருண்முருகர் சரணம் வாழி,
கருணைமழை பொழிபனிரு நயனமதி னொடுவலிய
கவினுலவு தோள்கள் வாழி,
கனகிரியை இருபிளவு படவுருவு நெடியவயில்
கரதலத் தினிது வாழி,
வருணமர கதவழகு திகழவரும் அவுணனெனும்
மயிலினொடு சேவல் வாழி,
வனசரர்தம் அரசனுத வியகுறமினொடு கடவுண்
மயிலிவர்கள் தினமும் வாழி,
தருணமிது எனவமரர் பணிநல்லை அமர்கந்தர்
தடிதடியர் நிதமும் வாழி,
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
சடட்சரம் வாழி வாழி,

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லியூர் துர்க்கையும் மாசி மாதச் சிறப்புக்களும்

து. சுபாஷினி,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

சிவபூமி என வர்ணிக்கப்படும் ஈழவளநாட்டின் சிரசாகிய யாழ்ப்பாணத்திலே நீர்வளமும், மண்வளமும், பக்திவளமும் பொருந்திய கிராமமே தெல்லிப்பழை ஆகும். இங்கே இன்றைக்கு நானூறு ஆண்டுகள் பழமையான தெல்லிப்பழை துர்க்கையம்மனின் ஆலயம் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக இருப்பதுடன் பல அடியவர்களின் குறைதீர்க்கும் ஆலயமாகவும் விளங்குகின்றது. தினமும் ஐந்து காலப் பூசையுடனும் பல விரதங்களும் பூஜைகளும் சிறப்பாக நடைபெறும் இவ் ஆலயத்தில் மாசி மாதத்தில் கொண்டாடப்படும் சிறப்பான தினங்களை சுருக்கமாக நோக்குவோம்.

மாதங்களிலே மகத்துவம் நிறைந்ததாக போற்றப்படும் மாசி மாதத்தினை மந்திரமாதம், மங்கலமாதம், புண்ணியமாதம் எனப் பலவாறு நாம் போற்றுகின்றோம். இதற்கு காரணம் இம் மாதத்திலே இந்துக்களாகிய நாம் பல விரதங்களை அனுட்டிப்பதுடன் பல விஷேட தினங்களையும் நாம் கொண்டாடுகின்றோம் ஆகும். சிவன், முருகன், விஸ்ணு, அம்மன் போன்ற கடவுளர்களுக்கு விஷேடமாக பூஜைகள் நடைபெறும் இம் மாதத்திலே சிம்மவாகினியாக தெல்லிநகரிலே வீற்றிருக்கும் துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெறும் மாசிமாத விஷேட திருவிழாக்களாக மாசி மாத சங்கிராந்தி, இலட்சார்ச்சனை, மாசிமகம், மாசிமாத பூரணைத் திருவிழா மகா சிவராத்திரி தினம் போன்றனவற்றைக் கூறலாம். மாசிமாத சங்கிராந்தி என்பது மாசி மாதப் பிறப்பு தினத்தையே இவ்வாறு அழைக்கின்றோம். ஒரு வருடத்தில் வரும் பன்னிரண்டு சங்கிராந்தித் தினங்களும் சிரார்த்தத்திற்குரிய தினங்கள் எனவும் சொல்லப்படுகின்றது. இந் நாளிலே துர்க்கையம்மன் ஆலயத்திலே அதிகாலை திருப்பள்ளியெழுச்சியுடன் ஆரம்பமாகி உதயக்காலப் பூசையின் பின் அம்பாளின் பிரதிநிதியாக அஸ்திரதேவர் துர்க்கா புஸ்கரணி தீர்த்தத் தடாகத்தில் எழுந்தருளி அங்கே தீர்த்தம் நடைபெறும்.

மாசிமக இலட்சார்ச்சனை ஆனது இம் மாதத்திலே வரும் தேவிக்குரிய சிறப்பான திருவிழாவாகும். மாசிமக தினத்திற்கு முன்னுள்ள பத்து தினங்களிலும் காலையும் மாலையுமாக இலட்சார்ச்சனை நடைபெறும். இக்காலத்தில் காலைப்பூசை மாலைப் பூசையைத் தொடர்ந்து. வசந்தமண்டபத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ துர்க்கா தேவிக்கு ஐந்து குருமார்களினால் முறைப்படி நியாசம் முதலிய கிரியைகள் செய்யப்பட்டு தீபாரதனைகளின் பின் பத்திரங்கள், புஸ்பங்கள், ஸ்வர்ண புஸ்பம் என்பவற்றால் அர்ச்சனையும் நிறைவாக ஹோமமும் நடைபெறும். ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றும் இல்லாத தேவிக்கு ஆயிரம் நாமங்களால் செய்யப்படும் அர்ச்சனையும் விஷேட பூஜையும் நடைபெறும் தினங்களாக இலட்சார்ச்சனை உள்ளது. அர்ச்சனை ஹோமம் வளர்ப்பது எனப் பல சிறப்பான வழிபாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுவதுடன் அடியவர்களுக்கு உலக மாதாவாகிய அன்னை கருணை வடிவாக எழுந்தருளி அருள்பாலிக்கும் காலமாகும். இலட்சார்ச்சனையை அடுத்து மாசிமகமானது இவ் வாலயத்திலே சிறப்பாக அனுட்டிக்கப்படுகின்றது.

மாசிமகம் என்பது மாசி மாத பௌர்ணமியுடன் கூடிவரும் மகநட்சத்திர நாளில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறப்பான நாளாகும். இந்த வகையில் ஆலயங்களில் நடைபெறும் விழாக்களும் விரதங்களும் நம்மை மேலான நிலைக்கு இட்டுச் செல்லும் தன்மையுடையனவாகும். மாசி மாதத்தில் வரும் மாசி மகப் பெருவிழாவை இந்துக்கள் கடலாட்டு விழா எனவும் அழைப்பர் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை வருவது மகாமகம் ஆயினும் ஆண்டு தோறும் வரும் மாசி மாதத்து மக நட்சத்திரமும் நீராட்டு விழாவிற்குரியதாகும். இந் நீராட்டு விழா இறைவனுக்கு பற்பல சிறப்புக் கொள்ளப்படுகின்றது. இதனையே திருஞானசம்பந்தப் பெருமானது பதிகத்தினூடாகவும் அறிய முடிகின்றதாகும். பூம்பாவை என்ற பெண்ணை எழுப்பும் போது “மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக் கடலாட்டுக் கண்டான் ...” எனும் பதிகத்தில் கடலாட்டு எனப்படும் மாசி மகத்தின் சிறப்பை அவர் வர்ணிப்பதைக் காணமுடிகின்றதாகும்.

பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் மாய்ந்தழுந்தும் ஆன்மாவானது இறைவனது அருட்கடலாகிய இன்ப வெள்ளத்திலே அமிழ்ந்து திளைக்கச் செய்யும் இந் நன்னாளிலே தெல்லியூரிலே அமர்ந்திருக்கும் துர்க்கையவளின் ஆலயத்திலே அதிகாலை ஐந்து அரை மணிக்கு உஷத்கால பூசையுடன் ஆரம்பித்து மாசிமகத் தீர்த்தம் துர்க்கா புஸ்கரணியில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து காலைச் சந்திப் பூசை நிகழும் காலச் சந்திபூசையின் பின் மாசி மக விஷேட திருவிழா ஆரம்பமாகும். இதன் போது 81 கலச அபிஷேகம் நிகழ்வது சிறப்பம்சமாகும். குறிப்பாக எழுந்தருளி அம்பாளுக்கு நடைபெறும் திரவியாபிஷேகம் காண கண்கோடி வேண்டும் குடம் குடமாக பால், தயிர், கரும்புச்சாறு, தேன் மற்றும் பல வகை வாழைப்பழங்களும், மாம்பழம், பலாப்பழம், மாதுளம்பழம் உட்பட ஏராளமான பழவகைகள் மற்றும் விஷேட திரவியங்கள் கொண்டு இவ் அபிஷேகங்கள் ஏறத்தாழ ஒருமணி நேரமாக நடைபெறும். திரவியாபிஷேகம் நிறைவேறியபின் பூசிக்கப்பட்ட 81 கலசங்களாலும் அபிஷேகம் நடைபெறும்.

பின்னர் வசந்த மண்டபத்தில் சர்வாலங்காரத்துடன் வீற்றிருக்கும் அம்பாளுக்கு விஷேட தீபாராதனையும் சுவர்ணபத்ம புஸ்பார்ச்சனையும் நிகழும் தொடர்ந்து அம்பாள் பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் உள்வீதி உலா வருதல் கண்கொள்ளாக் காட்சியாகும். அன்று பல பூசைகளாலும் அபிஷேகங்களாலும், அர்ச்சனையினாலும் அம்பாள் மகிழ்விக்கப்பட்டு சாந்த சொருபிணியாக பக்தர்களுக்கு காட்சி கொடுக்கின்றாள் ஆகும். இந் நன்னாள் ஏனைய ஆலயங்களைப் போலவே இங்கும் சிறப்பாகவும் பக்தியாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி மகம் பற்றி பல புராணக் கதைகளும் காணப்படுவதைக் காணலாம் வருணபகவானைப் பிடித்து இருந்த பிரமஹத்தி தோஷத்தில் இருந்து சிவன் அவரைக் காப்பாற்றிய நாள் எனவும் அம்பிகை தட்சாயிணி எனும் நாமத்துடன் அவதரித்த நாள் எனவும் பல சிறப்பான புராணக் கதைகள் இந்நாளுடன் தொடர்புபட்டிருப்பதனையும் நாம் காணமுடிகின்றதாகும். இதனைத் தொடர்ந்து மாசி மாதத்தில் வரும் சிறப்பான நாளாக மாசிமாத பூரணைத் திருவிழா காணப்படுகின்றது.

பூரணைத் திருவிழா என நாம் அழைப்பது மாதந்தோறும் பூரணையில் வருகின்ற பூஜையாகும். இதனை நாம் ஸ்ரீ சக்கர பூஜை எனவும் அழைக்கின்றோம். அன்னை பராசக்தியைப் போற்றுவதற்கு பல வழிபாடுகள் செய்யும் நாம் அன்னையை ஸ்ரீ என்னும் சொல்லினால் அழைத்து இயந்திரத்தில் பூசிப்பதால் ஸ்ரீ சக்கரப் பூஜை என்று சிறப்பு வழிபாட்டுக்குரியதாயிற்று ஒவ்வொரு மாதமும் வருகின்ற பூரணைத் திருவிழா இங்கே தெல்லியூர் துர்க்கையின் ஆலயத்திலே மிகவும் சிறப்பாக ஸ்ரீ சக்கரத்தில் வைத்து அன்னையைப் பூசிக்கப்படுகின்றதாகும். அது போலவே மாசி மாதப் பூரணையும் சிறப்பானதாகக் காணப்படுகின்றதாகும்.

"பூவுளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநுன் னடியிணைகாண்கிலா வித்தகமென்னாகும்..."

என்ற ஞான சம்பந்தப் பெருமானின் பதிகத்துக் கிணங்க இங்கே மாசிமாதத்தில் அனுட்டிக்கப்படும் சிறப்பான தினங்களில் ஒன்றாக மகா சிவராத்திரியும் காணப்படுகின்றது. மகா சிவராத்திரி என்பது இப் பிரபஞ்சத்தைப் படைத்தும் காத்தும் வந்த அயனும் அரியும் இப் பிரபஞ்சம் நிலைபெறுவதற்கு தாமே கர்த்தாக்கள் எனும் இறுமாப்புக் கொண்டிருந்தார்கள் அதனால் ஒருவருக்கு கொருவர் முரண்பட்ட வேளையிலே சிவபெருமான் அவ்விருவருக்கிடையிலும் ஒளிப்பிளம்பாக சோதி வடிவாகத் தோன்றி அவர்களின் செருக்கை அடக்குவதற்கு அடி முடி தேட சொன்ன வரலாறே சிவராத்திரி தினமாகும். இந் நன்னாளிலே சிவபெருமான் ஒளிப்பிளம்பாக உருவமற்றவராக நின்ற இத் தினத்திலே சிவ ஆலயங்களில் இரவு முழுவதும் பல சிறப்பான ஜாமப்பூசைகள் நடைபெறுவதுடன் அன்று சிவனுக்கு எல்லா இடங்களிலும் பல விஷேட ஆராதனைகள் இடம் பெறுகின்றதாகும். இது எமது அம்பிகையின் ஆலயத்திலும் பகலில் சிறப்பான பூஜைகள் நடைபெறுகின்றதாகும்.

எனவே புண்ணிய இம் மாசிமாதத்தில் எம் அம்பிகையின் ஆலயத்தில் இடம் பெறும் காணற்கரிய பல விஷேட பூசைகளிலும் ஆராதனைகளிலும் நாமும் கலந்து அன்னையின் அருளைப் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவராத்திரி விரதமும் அதன் மகிமையும்

செ. ரஜிதா,

துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

விரதங்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் உறுதியைத் தருவன. இந்த நன்னோக்கிலேயே விரதங்கள் யாவும் அனுட்டிக்கப்படுகின்றன. தாம் தாம் உபாசிக்கும் தெய்வங்களின் திருவருளைப் பெற விரதங்கள் மகா மருந்தாக அமைந்துள்ளன. விரதங்கள் பல அவற்றுள் சில மிக முக்கியமானவையாகும். உதாரணமாக கந்தஷஷ்டி முருகப் பக்தர்களுக்கு முக்கியமான விரதம் கந்தஷஷ்டி முருகப்பெருமானின் நாமமாகிய 'கந்த' என ஆரம்பிப்பது போல முழுமுதற் கடவுளாகிய எம் பெருமானின் பஞ்சாட்சரப் பகுதியாகிய 'சிவ' என சிவராத்திரி விரதம் ஆரம்பிக்கப்படுகின்றது.

சிவ விரதங்களுள் தலை சிறந்த விரதமாக மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பல கல்ப கோடி இரவுகள் சேர்ந்து வந்த ராத்திரி மகா சிவராத்திரி ஆகும். மாசி மாதத்தில் வரும் கிருஷ்ண பட்ச சதுர்தசி திதியில் இரவில் அனுஷ்டிக்கப்படுகின்றது. சிவராத்திரி விரதத்தின் மகிமைகளைச் சிறந்த முறையில் விரிவாக அறிய மக்கள் ஆவலுற்ற காலத்தில் எம் நாடு செய்த தவப் பயனலே யாழ்ப்பாணத்தில் அந்தணர் குலத்தை சேர்ந்த பிரம்மஸ்ரீ. வரதராஜ கவிஞரால் (வரத பண்டிதர்) சிவராத்திரி புராணம் செய்யுள் வடிவில் பாடப்பட்டது.

ஈஸ்வரனின் ஐந்து முகத்தை நினைவூட்டும் விதமாகவும், பஞ்சபூதங்களின் தத்துவங்களை விளக்கும் விதமாகவும் ஐந்து வித சிவராத்திரிகள் வகைப்பட்டுள்ளன. அவையாவன நித்திய சிவராத்திரி, யோக சிவராத்திரி, மாத சிவராத்திரி, பக்க சிவராத்திரி, மகா சிவராத்திரி. வருடம் முழுவதும் வரும் இருபத்து நான்கு சதுர்த்தசிகளிலும் (பூர்வபக்கம் 12, அபரபக்கம் 12) அனுட்டிப்பது நித்திய சிவராத்திரியாகும்.

எந்த மாதத்திலாவது வரும் சோமவாரத்திலே (திங்கட்கிழமை) சதுர்த்தசி, அல்லது அமாவாசை முழுதாய் நிற்பினும் அல்லது இரவு நாலாம் சாமம் வரை நிற்பினும் யோக சிவராத்திரி எனப்படும். இதை சோம சிவராத்திரி என்றும் கூறுவர்.

சித்திரைமாத அபரபக்க அட்டமி, வைகாசிமாத பூர்வபக்க அட்டமி, ஆனி மாத பூர்வபக்க சதுர்த்தி, ஆடிமாத அபரபக்க பஞ்சமி, ஆவணிமாத பூர்வ பக்க அட்டமி, புரட்டாதிமாத பூர்வபக்க திரயோதசி, ஐப்பசிமாத பூர்வபக்க துவாதசி கார்த்திகை மாத பூர்வபக்க சப்தமி, அபரபக்க அட்டமி. மார்கழி மாத இருபக்கத்து சதுர்த்தசிகள், தைமாத பூர்வபக்க திருதியை, மாசிமாத அபரபக்க சதுர்த்தசி, பங்குனிமாத பூர்வபக்க திருதியை ஆகிய காலங்களில் அனுட்டிப்பது மாத சிவராத்திரியாகும். இது ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் வருதல் மிக விஷேடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமாத அபரபக்க பிரதமை முதல் பதின்மூன்று நாட்களும் ஒருபோது உண்டி கொண்டு, சதுர்த்தசி தினத்திலே உபவாசம் இருந்து அனுட்டிப்பது பக்க சிவராத்திரியாகும். மாசிமாத அபரபக்க சதுர்த்தசி தினத்திரவே மகா சிவராத்திரியாகும். அன்று நள்ளிரவில் உள்ள விஷேட காலத்தை லிங்கோற்பவ காலம் என்பர். இக்காலத்திலேயே சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றினார்.

சிவராத்திரி என்பது மகா பிரளய காலத்தை உணர்த்தும் தத்துவமாகும். அந்த வகையில் ஆன்மா எத்தகைய பிறவிகளை எடுத்து பழைய வினைப் பயன்களை நுகர்ந்தும் ஆன்மாக்களால் தம் பழையவினைப் பயனை அனுபவித்து முடிக்க முடியாமையால் அவை இழைப்படைந்து விடுகின்றது. நாம் எடுத்துக் கொண்ட கடமை முடியாவிட்டாலும் நாம் அந்தக் கடமையை இடையில் விட்டுச் சிறிது இளைப்பாறுவது போலவும், இரவிலே துயில் கொண்டு ஆறுவது போலவும், தமது பிறவி துன்பத்தை தொடர்ந்து அனுபவித்து இளைத்த உயிர்கள் சிறிது காலம் ஆறுதல் பெற வேண்டும். என்பதற்காகப் பிரளயகாலம் ஒன்று தோன்றுகின்றது.

இக் காலத்திலே உயிர்கள் ஆறுதல் அடைகின்றது. மேலும் அது இரவாயிப்பது மிகவும் பொருத்தமானதாகும். அத்தகையான அமைதியான காலத்தையும் அக் காலத்து உயிர்கள் ஆறுதலை உணரும் அடையாளமாக சிவராத்திரி காலம் கருதப்படுகின்றது.

மகா சிவராத்திரியை பற்றிய புராணக்கதைகள் பல உள்ளன. அதில் முக்கியமாகக் கூறப்படும் கதை ஒன்று உள்ளது. அதாவது பிரளயகாலம், பிரம்மனும் அவரால் சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து ஜீவராசிகளும் அழிந்து விட்டனர். உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் எல்லையில்லாக் கருனையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள். அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாகச் செய்து உயிர்களையும் படைத்தருளினார். அப்போது உமையவள் சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்து போற்றிய காலம் சிவராத்திரி என்று பெயர் பெறவேண்டும் என்றும் அதனைச் சிவராத்திரி விரதம் என்று யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று அதை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முத்தியடைய வேண்டும் என்றும் பிரார்த்தித்தார். இறைவனும் அவ்வாறே அருள் புரிந்தார். அம்பிகையைத் தொடர்ந்து நந்தியம்பொருமாள் சனகாதி முனிவர் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து தங்கள் விருப்பம் நிறைவேறப் பெற்றார்கள் என்று புராணத்தில் கூறப்படுகின்றது.

'சிவராத்திரி விரதம் கடைப்பிடிப்போர் சிவராத்திரிக்கு முன்னாள் ஒரு வேளை உண்டு மங்கையர் சங்கமம் நீக்கல் முதலிய ஆசாரம் தவறாது இருந்து பொழுது போக்கிச் சுத்தமான இடத்தில் படுத்து உறங்கிச் திரும்பி வீட்டிற்கு வந்து பரமேசுரனைப் பூசிக்கும் இடத்தைக் கோமயத்தால் மெழுகிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாடையையும் பட்டாடையையும் மேலே கட்டி வாழை மரங்களையும் கரும்புகளையும் நாட்டித் தோரணங்களையும் மலர்மாலைகளையும் தொடுத்து அலங்கரிக்க வேண்டும். பின்னர் நடுப்பகலில் ஸ்நானம் செய்து உச்சிக்கால அனுஷ்டானம் இயற்ற வேண்டும். பின்னர் பரமேசுரனை அருச்சித்தற்குரிய பொருட்களைச் சேகரித்து, சூரியன் அஸ்தமிக்கும் வேளையில் சிவாலயத்தில் கொண்டு போய் கொடுத்துப் பரமேசுரனை அர்ச்சிக்குமாறு ஏற்பாடு செய்து வீட்டினுக்கு வந்து பின்னுமோர்தரம் ஸ்நானம் செய்து மாலைக்கால அனுஷ்டானம் இயற்ற வேண்டும். பின்னர் பொன்னாடையால் அலங்கரித்த இடத்தில் பரமேசுரனைப் பீடத்தில் வைத்துத் தாபித்து ஆகமங்களில் விதித்த சிவபூஜா விதி தவறாமல் நான்கு சாமத்திலும் சாமத்திற்கு ஒரு முறை பூஜை செய்ய வேண்டும்' என்று காசி ஸ்ரீ வரதராஜ பண்டிதரவர்கள் இயற்றிய சிவராத்திரி புராணம் மூலமும் அதற்கு ஸ்ரீ நமச்சிவாயம் பிள்ளை அவர்கள் இயற்றிய அரும்பிரயோக உரையும் என்னும் நூலில் கூறப்படுகின்றது.

சிவராத்திரி விரதத்தினை பயபக்தியுடன் கண் விழித்து நான்கு கால வழிபாடு செய்யவேண்டும். மறுநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து அடியவர்களுடன் உணவருந்தி விரதத்தை நிறைவு செய்யவேண்டும்.

கண்விழித்திருந்து ஒவ்வொரு காலத்திலும் சிவபெருமானின் ஒவ்வொரு கோலத்தையும் வழிபாட வேண்டும். முதற் காலத்தில் முருப்பெருமானை நடுவில் அமர்த்தி உமாதேவியுடன் சிவபெருமானும் காட்சி தரும் சோமஸ்கந்தரை வழிபடுபவர். இரண்டாம் காலத்தில் தென் முகக்கடவுளான தட்சிணமூர்த்தியை வணங்கவேண்டும். மூன்றாம் காலத்தில் கருவறையின் பின்புறமுள்ள லிங்கோத்பவரை தரிசிக்கவேண்டும். நான்காம் காலத்தில் ரிஷபவாகன சிவனான சந்திரசேகரரை வழிபடவேண்டும்.

முதற்சாமத்திலே பஞ்சகவ்வியத்தால் அபிடேகித்து, சந்தனக்குழம்பு, வில்வம், தாமரைப்பூ என்பன சாத்தி, முற்தான்னம் அல்லது சுத்தான்னம் நிவேதித்து தூப தீப உபசாரம் செய்ய வேண்டும். இரண்டாம் சாமத்திலே பஞ்சாமிர்தத்தால் அபிடேகித்து, அகிற்குழம்பு, துளசி, தாமரைப்பூ என்பன சாத்தி திலான்னம் வேதித்து தூப தீப உபசாரம் செய்யவேண்டும். நான்காம் சாமத்தில் கருப்பஞ் சாற்றால் அபிடேகித்து, குங்குமம், நந்தியாவர்த்தம்பூ, உற்பலமலர் சாத்தி சுத்தான்னம் நிவேதித்து தூப தீப உபசாரஞ் செய்யவேண்டும். வில்வம், நொச்சி, மாவிலங்கு, முட்கிளுவை, விளா என்னும் இவற்றின் முக்கிளைப் பத்திரங்களையும் சாத்தி நான்காம் காலத்திலும் முறைப்படி நான்கு வேதங்களையும் ஓத வேண்டும்.

இவ்வாறு ஊனுறக்கமின்றி சிவபூசை செய்து விடியற் காலத்தில் ஸ்நானம் செய்து அநுட்டானம் முடித்து, விஷேட சிவபூசை செய்து குருவை வழிபட்டு உதய முதல் ஆறு நாளிகைக்குள் (காலை 8-30 மணிக்கு முன்) பாரணம் செய்யவேண்டும். இவ்வாறு சிவராத்திரி விரதம் அனுஸ்டிப்பதனால் இருபத்து நான்கு வருடம் நோற்றுப்பின் கோதானம், பூதானம், சுவர்ணதானம் முதலியவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கி இவ்விரதத்தினைப் பூர்த்தி செய்வதன் மூலம் இவ் விரதத்தின் மகிமையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

சிவராத்திரி விரதத்தை கடைப்பிடிப்பதன் மூலம் அவர் தாம் விரும்பிய போகங்களை அனுபவித்து இந்திரன் முதலியோர் போற்றக் கண்ணுதற் கடவுளது திருவடியை அடைவர், மனித பிறவி எடுத்தமைக்கான பலனை அடைந்து விடமுடியும் என்கின்றார் அகத்தியர். மேலும் சிவராத்திரி அன்று தானதர்மங்கள் செய்வதால் கோடி புண்ணியம் கிடைக்கும். சிவலிங்கம், உருத்திராட்சம், ரத்தினங்கள், நிவேதனப் பொருட்கள், அன்னம் போன்றவற்றை தானம் செய்யலாம்.

சிவராத்திரி அன்று கண் விழித்திருந்து விரதம் இருந்து இறைவனை வணங்கும் போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும். தியானம் நிலைக்கும், நினைத்த காரியம் நடக்கும், பாவங்கள் நீங்கும், பெண்களுக்கு இழைத்த சாபம் நீங்கும், சாபங்கள், கொடுமைகள் நீங்கும், எமபயம் நீங்கும், பிணிகள் அகன்று நலம் பெறலாம், சகல மங்கலங்களும் உண்டாகும். சிவராத்திரியின் நான்காம் காலத்தில் மிருத்யுஞ்சய மந்திரத்தை ஒதுவதால் நோய்கள் அனைத்தும் விலகும்.

சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கோட்டோ பகல் பொழுதை கழிக்கவேண்டும். மகா சிவராத்திரி தினத்தன்று அருகில் உள்ள சிவலாயத்திற்கு சென்று கண் விழித்து சிவபுராணம் படித்து இறைவன் அருள் பெறுவோம். அன்று தானதர்மங்கள் செய்வதால் கோடி புண்ணியம் கிடைக்கும். சிவலிங்கம், உருத்திராட்சம், ரத்தினங்கள், நிவேதனப் பொருட்கள், அன்னம் போன்றவற்றை தானம் செய்யலாம்.

சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ பகல் பொழுதை கழிக்கவேண்டும். மகா சிவராத்திரி தினத்தன்று அருகில் உள்ள சிவலாயத்திற்கு சென்று கண் விழித்து சிவபுராணம் படித்து இறைவன் அருள் பெறுவோம்.

**சிவாய நமமென்று சிந்தித் திருப்போர்க்**
**கபாய மொருநாளு மில்லை உபாயம்**
**இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்**
**விதியே மதியாய் விடும்.**

சிவாயநம என்று தியானித்துக் கொண்டு இருப்பவருக்கு ஒருபோதும் துன்பம் உண்டாகாது. இஃதொன்றுமே விதியை வெல்லுவதற்கேற்ற உபாயமும் உண்மையாகிய அறிவும் ஆகும். இதுவல்லாத எல்லா அறிவுகளும் விதியின்படியே ஆகிவிடும்.

**- ஔவையார் இயற்றிய நல்வழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மகத்தின் மாண்பு

இ. சர்மிலா,
கிழக்குப் பல்கலைக்கழகம்
தூர்க்காபுரம் மகளிர் இல்லம்

"மகத்தில் பிறந்தாள் ஜகத்தை ஆள்வார்" என்பது ஜோதிட வாக்கு. மாசி மாதம் மகம் மிகவும் பிரசித்தம் பெற்றது. மாசி மாத பௌர்ணமியுடன் கூடிவரும் மக நட்சத்திர நாளே மாசி மகம் ஆகும். எல்லா மாதங்களிலும் "மக" நட்சத்திரம் வந்தாலும் மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திரம் மட்டுமே பெருமை பெற்றதாகத் திகழ்கிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மாசி மகம் "மகா மகம்" என்று வெகு சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. சில நேரங்களில் பதினொரு வருடங்களில் இந்த மகா மகம் ஏற்படுகிறது. அதனை "இளைய மாமாங்கம்" என்பார்கள் பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் மாய்ந்தெழுந்தும் ஆன்மாவானது இறைவனது அருட்கடலாகிய இன்ப வெள்ளத்தில் அமிழ்ந்து திளைக்கச் செய்யும் நன்நாளே மாசிமகக் கடலாடு தீர்த்தமாகும்.

மாசி மகத்துக்கு மிகவும் சிறப்பு என்ன என்றால் அந்த நாள் எல்லா தெய்வங்களுக்கும் சிறப்பான நாள் ஆகும். மாசி மக நன்நாளில் தான் சிவபெருமான் வருணபகவானுக்கு சாபவிமோஷம் கொடுத்தார், எனவும் மஹாவிஸ்ணுவும் வராக அவதாரம் எடுத்து பாதாளத்தில் இருந்து பூமியை வெளியே கொண்டு வந்த நாள் ஆகவும் கூறப்படுகிறது. தந்தைக்கு முருகன் உபதேசம் செய்த நன்னாளும் இதுவே என புராணங்களில் குறிப்பிடப்படுகிறது.

இந்நாளில் தான் உமாதேவியார் தட்சனின் மகள் தாட்சாயிணியாக அவதரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தாட்சாயிணி மாசி மகத்தன்று அவதாரம் செய்ததால் தேவியின் பிறந்த தினமாக அப்புனித நாள் மகத்துவம் பெறுகிறது. மாசி மாத மக நட்சத்திர நன்னாளில் திருத்தலங்களில், நீராடல் நிகழ்வதை திருநானசம்பந்தர் திருமயிலை கபாலீச்சரத் திருப்பதிகத்தில் பாடியுள்ளார்.

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஆடலானே றூரும் மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்."

சங்ககாலம் தொடங்கி மாசிமக விழா நடைபெற்றது தொடர்பான செய்திகள் இலக்கியங்களிலும், செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் கானப்படுகின்றன. இலங்கியங்களில், மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் "மாங்குடி மருதனார்" ஏழாம் நாள் இறுதியில் நீராடல் விழா அமைந்தது பற்றிக் குறிப்பிடுகிறார். சங்க காலப் பாண்டிய மன்னன் "முந்நீர் விழாவின் நெடியோன்" என்று அழைக்கப்படுவதாக ஒன்பதாவது புறநானூற்றுப் பாடலில் குறிப்பிடப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோக்கரு நந்தடக்கன் எனும் ஆய்குல மன்னன் (கி.பி 9ம் நூற்றாண்டு) வழங்கிய செப்பேட்டில் திருமாலுக்கு ஏழுநாள் திருவிழா எடுக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொன்மையான மாசிமக விழா பற்றிய குறிப்பு ஒன்றில் திருச்செந்தூரில் இரண்டாம் வரகுணபாட்டியரின் (கி.பி862) மூன்று அதிகாரிகள் 1400 காசினை மூலதனமாகக் கொண்டு பல விழாக்கள் நடத்தியதையும், அதில் ஒரு விழாவாக மாசிமகம் என குறிக்கப்பட்டுள்ளதையும் காணலாம்.

கல்வெட்டில் முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் (கி.பி 1009) திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறை மகாதேவர்க்கு மாசிமகத்தன்று பெருந்திருவமுது படைக்கப்பட்டதாகவும், அதற்காக ஒன்றரை மா அளவு நிலம் நல்கப்பட்டு இரண்டு கல அரிசி கிடைக்க வழி செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இராசேந்திரசோழன் 4ஆம் ஆட்சியாண்டில் (கி.பி 1016) நாகபட்டினக் கூற்றத்து ஊரார்கள் இறைவனது மாசிமக விழாவின் ஆறாம் நாள் செலவுகளுக்காக நிலமளித்த செய்தியினை அவ்வூரிலுள்ள கவ்வெட்டின் மூலமாக அறியலாம்.

முதலாம் குலோத்துங்கசோழன் (கி.பி 1070- 1126) தளபதி நரலோக வீரன் சிதம்பரம் கோயிலில் செய்த திருப்பணிகளை அழகான தமிழ்ப் பாடல்களாகவும், சமஸ்கிருதச் சுலோகங்களாகவும் சிதம்பரம் நூற்றுக்கால் மண்டபத்து தூண்களில் கல்வெட்டாக பொறித்துள்ளார். அவற்றில் ஒரு பாடலில் மாசிக் கடலாடலைப் பற்றியும், அதற்காக அம்மன்னன் அமைத்த மண்டபம், பெருவழி ஆகியவற்றையும் பற்றிக் கூறுகிறது.

திருமறைக்காட்டில் ஏழு நாள் கொண்டாடப்பட்ட மாசித்திருநாளின் போது இறைவன் மோகனதேவருக்கு நாள் ஒன்றுக்கு பதின் கலமாக எழுபது கலம் நெல் தானமாக அளிக்கும் வகையில் பாலையூர் கிழவன் நாரணன் காடன் நிலம் தந்துள்ளமை பற்றியும், அம்மன்னனே இரண்டு ஆண்டுகளுக்குப் பின் மாசி மகத்துக்கு பெருந்திருவமுது இறைவனுக்கு படைத்திட வேண்டி இன்னும் கூடுதலாக நிலமளித்துள்ளமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. திருவரங்கத்தில் கி.பி 1531ஐச் சேர்ந்த விஜயநகர் காலக் கல்வெட்டின் மூலமாக உறையூரில் நடைபெற்ற மாசிமக விழா பற்றிய செய்தியை அறிய முடிகிறது.

குடுமியான் மலையில் உள்ள குலோத்துங்கன் மற்றும் பரகேசரி பட்டமுடைய மற்றொரு சோழ மன்னன் ஆகியோரின் கல்வெட்டுக்கள் மாசி மக நாளில் பிராமணர்களுக்கும் பதினைந்து சிவனடியார்களுக்கும் உணவு வழங்க 15 கழஞ்சு பொன் முதலாக வழங்கப்பட்டதைப் பற்றிக் கூறுகின்றன. மாசி மக விழாவின் போது தெய்வங்கள் நீராடுவதும் அதன் பிறகு அருகில் அமைக்கப்பட்ட மண்டபம், தோப்பு ஆகியவற்றில் காட்சி தருவதும் அத்தெய்வங்களுக்கு பெருந்திருவமுது படையல் படைக்கப்பட்டுவதும் மரபு என்று மேற்சொன்ன கல்வெட்டுச் செய்திகள் விளக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி மகத்தினத்தில் விரதம் இருந்தால் மறுபிறவி கிடையாது என்று புராணங்கள் கூறுகின்றன. இந்நாளில் புண்ணிய நதிகள், தீர்த்தங்களில் நீராடுவதும் பாவங்களை போக்கும் என்பது ஐதீகம். இந்நாளில் நாம் செய்யும் எல்லாக் காரியங்களும் இரட்டிப்புப் பலன்களைத் தரும் எனப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது. மாசி மகத்தின் போது அதிகாலையில் எழுந்து நீராடி பக்தியுடன் துளசி கொண்டு மகாவிஷ்ணுவை வழிபட்டு வந்தால் வைகுண்டத்தில் இடம் கிடைக்கும் எனவும், அம்பிகையை குங்குமத்தால் அர்ச்சனை செய்து வழிபட வாழ்வில் இன்பமும் வெற்றியும் கிடைக்கும் என்பதும் சரஸ்வதியை மணமுள்ள மலர்களால் வழிபட்டால் கல்வியில் சிறந்து விளங்கலாம் என்பதும் நம்பிக்கை ஆகும்.

இத்தகைய சிறப்புகள் பொருந்திய மாசிமகப் பெருவிழா எமது துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்றுவரை கொண்டாடப்பட்டு வருகின்றது. மாசிமகத்திற்கு முன்னுள்ள பத்து நாட்களும் துர்க்கை அம்பாளுக்கு இலட்சார்ச்சனை நடைபெற்று இறுதி நாளான மாசிமகத்தன்று விஷேட பூசைகள் மற்றும் தீர்த்தமாடுதல், அபிஷேகம், புஷ்பார்ச்சனை, திருவீதி உலா என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. எனவே மாசிமக அந்நாளில் மக்கள் தமக்கும் தமது சந்ததியினருக்கும் நன்மைகளைக் பெருக்கின் கொள்ளும் வழிகளில் மாசிமகப் புனித நீராடலும், விரதம் அனுஷ்டித்தலும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

**வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்**
**செவ்வியும், ஒங்கள் திருமணக்கோலமும், சிந்தையுள்ளே**
**அவ்வியம் தீர்த்து என்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து**
**வெவ்விய காலன் என்மேல் வரும்போது- வெளி நிற்கவே.**

அபிராமித் தாயே! என் அகப்பற்று, புறப்பற்று ஆகிய பாசங்களை அகற்றி, என்னை ஆட்கொண்டு அருளிய நின் பொற்பாதங்களோடு, எந்தை எம்பிரானோடு இரண்டறக் கலந்திருக்கும் அர்த்த நாரீஸ்வரர் அழகும், தனித்தனி நின்று காட்சி தரும் திருமணக்கோலமும், கொடிய என்மேல் எதழர்த்து வரும் காலங்களில் காட்சியருள வேண்டும்.

- அபிராமி அந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் துர்க்காபுரம் மகளிர் இல்லம்

த. தர்மினி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

'அவனியிற் புகுந்தமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளியெழுந்தருளாயே'

என திருப்பள்ளி எழுச்சி பாடி விடிவை வரவேற்கும் சிறப்பு வாய்ந்த மார்கழி மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் தீது அகன்று உலகம் உய்ய திருவருள் பேற்றுடன் உதித்தவர் தான் எங்கள் அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார். அம்மா அவர்களின் ஆற்றலை அவர் செய்த அறப் பணியை எளிதில் எழுதி முடிக்க இயலாது. தமிழகத்து தமிழ்ப் புலமையாளரும் ஈழத்துப் பேரறிஞர்களும் 'இவருக்கு ஈடாக வேறு எவரும் இல்லை' என்று அன்றே சொல்லும் தகைமையில் தம்மை நிலை நிறுத்தியவர் எம் அன்னை.

தெல்லிமா நகரில் இன்று உலகம் போற்றும் திருக்கோயிலாக மிளிர்ந்து கொண்டிருக்கும் துர்க்கையம்பாள் சந்நிதானத்தின் சிறப்பை போற்றுபவர்கள் எம் அன்னை துர்க்கா துரந்தரியின் தூய பணியை வாழ்த்தத் தவறுவதில்லை. கடவுள் வாழும் கோயிலில் கருணைக்கு பஞ்சமில்லை என்பதை உலகளாவிய ரீதியில் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் சிறப்பாகவும் பெருமையாகவும் பேசப்படும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் அவதானிக்கலாம்.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டிக் காப்பவர்கள் அந்நாட்டு பெண்களே ஆவர். ஓவ்வோர் சமூகத்திலும் உருவாகும் கற்றறிந்தோர்க்கு பின்னால் ஒரு பெண் உந்துசக்தியாக இருப்பதை வரலாறு கூறுகின்றது. பெண்ணினத்தின் முன்னேற்றம் சட்டதிட்டங்களினால் சூழல் காரணிகளினால் தடைப்பட்டால் அது சமுதாயத்திற்கு பெரும் கேடாக அமையும்.

இற்றைக்கு 39 வருடங்களுக்கு முன் இதனை உணர்ந்து ஆதரவற்ற, பொருளாதார ரீதியில் நலிவுற்ற பெண் பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும், சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்ற சமூக சிந்தனையுடன் 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' எனும் ஏற்றமிகு இலட்சிய நோக்குடனும் எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருளோடும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் நிறுவப்பட்ட மகளிர் இல்லம் பெரு விருட்சமாக, விழுதுகளோடு 39 ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது.

03. 02. 1982 இல் 09 சிறுமிகளுடன் ஆரம்பித்த தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் இற்றைக்கு ஏறக் குறைய 150 பிள்ளைகளுடன் வீறு நடைபோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது இதுவரை சுமார் 750 பிள்ளைகளுக்கு மேல் வாழ்வளித்திருக்கின்றது. ஆன்மீக வழிகாட்டி துர்க்கா துரந்தரி அவர்களின் சிந்தனையில் உதித்த இந்த சரணாலயம் இன்று எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வருகின்றது. இதற்கு காரணம் எமது அம்மா அவர்களின் தியாக சிந்தனையும் தவப்பலனும் என்பதோடு எம்மை காத்திடும் ஸ்ரீ துர்க்காதேவியின் அருட்கடாட்ச முமேயாகும்.

அம்மையாரின் சிந்தனையில் உதித்த காலை பஜனை (கோவில் வெளி வீதியை சுற்றி) இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பது சிறப்பு இல்லத்தின் யாப்பின் படி 06 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட தாய், தந்தையரை இழந்த பெண் பிள்ளைகளை அனுமதிக்கின்ற போதும் நாட்டின் அசாதாரண சூழலால் நிர்க்கதியான வறுமைக்கோட்டின் கீழ் தள்ளப்பட்ட பிள்ளைகள், மகளிர் இல்லத்தையே நம்பி இருக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் இங்கே வசிக்கின்றனர்.

'இவன் தந்தை எந்நோற்றான் கொல்' என்னும் சொல் என்ற கூற்றின்படி எமது அன்னையின் மறைவிற்கு பின்னர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் (தலைவர் ஐயா) ஐயா அவர்கள் அன்னையினுடைய வழியிலே தானும் பின்தொடர்ந்து துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும் மற்றும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கும் தலைமை தாங்கி அம்பாளின் திருவருளால் தெய்வீக பணிகளை யாதொரு குறையுமின்றி மிகவும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றார்.

அம்மையாரின் பணிகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்கின்றார் எமது தலைவர் ஐயா அவர்கள். ஆம் புதிய பொலிவுடன் கட்டடங்கள், பிள்ளைகளின் போக்குவரத்து, கல்வி, உயர் கல்வி, இணைபாட விதானம், கணனிக் கல்வி, பொழுதுபோக்கு மற்றும் வீடமைப்புத் திட்டம் போன்ற பல வசதிகளை பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார்.

பொதுவாக ஆதரவற்றோர் இல்லம் எனும் போது அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் என்பதைதான் அத்தியாவசிய தேவைகள் என்பது சமூகத்தின் எண்ணமாகும். ஆனால் அவர்களின் எதிர்காலம் மற்றும் அவர்கள் சிறந்தவர்களாக சமூகத்தில் காலடி எடுத்து வைப்பதற்கு கல்விதான் முக்கியம் என்பதை உணர்த்துவது எமது இல்லம் என்பதில் மிகவும் பெருமையடைகின்றேன்.

இல்லப் பிள்ளைகள் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் (தரம் 1- 5 வரை) தரம் 6 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை மருதனார்மடம் யா / இராமநாதன் கல்லூரியிலும் கல்வி கற்கின்றார்கள். மேலும் கிழக்கு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், தேசிய கல்வியற் கல்லூரி, தேசிய உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களான Horrizon Campus, University of West Minster UK Informatics Institute of Technology போன்றவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Soft Ware Engineering, வர்த்தகம் மற்றும் கலை போன்ற துறைகளில் உயர்கல்வி கற்று பட்டதாரிகள் ஆகியுள்ளனர்.

இப்படி உயர்கல்வி கற்பதற்கு தகுதி பெறுவதற்கு எமது தலைவர், அதிபர், மேற்பார்வையாளர்கள் உறுதுணையாக இருந்து நெறிப்படுத்துகின்றார்கள். தற்போது நாட்டில் நிலவும் கொரோனா நோய் தொற்று காரணமாக ZOOM மூலமாக வகுப்புகள் நடைபெற்று வரும் நிலையில் அதற்கான சகல வசதிகளையும் எமது இல்லத்தில் செய்து தருகின்றார்கள். உதாரணமாக உயர்கல்விக்குத் தெரிவாகும் ஒவ்வொரு மாணவிக்கும் உடனடியாக ஒரு மடிக் கணனி வழங்கப்படுகிறது.

பிள்ளைகளில் இதுவரை சுமார் 25 பேர் பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததுடன் 15 பேர் பட்டப் படிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் 5 பேர் அனுமதியை எதிர்பார்த்த வண்ணம் உள்ளார்கள். அப்படி இருப்பவர்கள் துர்க்காதேவி ஆலய அலுவகத்திலும் திருமகள் அழுத்தகம் மற்றும் திருமகள் புத்தகசாலை என்பவற்றிலும் கடமையாற்றி வருகின்றார்கள். அத்துடன் எமது சகோதரிகள் பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பில் சித்தி பெற்று உதவி விரிவுரையாளராக கடமையாற்றினார்கள். மேலும் பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளை கற்பதற்கு எமது இல்லம் பெரிதும் உதவுகின்றது. இல்லத்தின் முதலாவது மென்கணனி பொறியியலாளராக கொழும்பில் உள்ள தனியார் கம்பனியில் இல்லப்பிள்ளை ஒருவர் பணிபுரிகின்றார்.

அதாவது எம்மைப் பொறுத்தவரை எந்தவொரு பிள்ளையும் எந்த வகையான கல்வியைப் பெற விரும்பனாலும் எமது வேண்டுகோள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் எமது இல்ல அதிபர் என்றைக்குமே அதனை மறுத்ததில்லை. இதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கும் தலைவர் ஐயாவிற்கும் அதிபருக்கும் நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். பல்கலைகழக கல்வியை முடித்து அரசாங்க உத்தியோகம் பெற்ற ஒரு சில பிள்ளைகள் தொடர்ந்தும் எதிர்கால திட்டமிடலுக்காக இல்லத்திலிருந்தே வேலைக்கு செல்கிறார்கள்.

இல்லம் பிள்ளைகளின் கல்வியை மேலும் வளப்படுத்தும் நோக்கமாவும் வினைதிறன் உள்ள வகையில் கல்வியைப் பெறவும் மாலைநேர, வார இறுதி பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதற்கு மேலதிகமாக இசை வகுப்புகளும் நடைபெறுகின்றன. குறிப்பாக வீணை, வயலின், மிருதங்கம், பண்ணிசை மற்றும் நடனம் போன்றன திறமையான ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுகின்றது. பிள்ளைகள் ஆர்வமுடன் கற்று வருவதுடன் அவர்கள் மன அழுத்தங்களுக்கு முகம் கொடுக்காமல் இருக்க இவை உதவுகின்றது. அத்துடன் தற்கால நவீன உலகின் தேவை கருதி கணனி வகுப்புகளும் இடம் பெற்று வருகின்றது.

மேலதிகமாக இருமாதங்களுக்கு ஒரு தடவை கடைசி வியாழக்கிழமை நடைபெறும் மாணவர் மன்றக் கூட்டத்தில் அம்மாதத்தில் பிறந்த சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கும் புதிய உடை வழங்கப்பட்டு வாழ்த்தப்படுகின்றார்கள். அத்துடன் மாணவர் மன்றத்தில் பேச்சு, பாடல், நாடகம், பத்திரிகை வாசித்தல், பொது அறிவு போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

எமது இல்லத்தைப் பொறுத்தவரை உணவு விடயத்தில் எந்தவொரு குறையையும் எளிதில் சொல்லி விட முடியாது. ஏனெனின் பிள்ளைகளுக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என பார்த்து பார்த்து சமையல் விடயத்தில் அதிகம் அவதானம் செலுத்துகிறார்கள் எமது மேற்பார்வையாளர்கள். ஏன் சில பெற்றோருக்கு கூட தம் பிள்ளைகளுக்கு எது பிடிக்காது என்பதை இலகுவில் அறியமாட்டார்கள். ஆனால் எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் அவ்வனைவரின் விருப்பையும் வெறுப்பையும் உணர்ந்தவர்கள் இவர்கள்.

அடுத்து எங்களுக்கான ஒழுக்கப் பண்புகளை கற்று எமது இல்ல மேற்பார்வையாளர்கள் இல்லத்திற்காக அரும்பணி ஆற்றுகிறார்கள். பிள்ளைகளின் ஒழுக்கம், உடை விடயத்தில் மிகவும் கண்டிப்புடனும் அவதானத்துடனும் இருப்பார்கள். பிள்ளைகளை எந்தவொரு இடத்திற்கு அழைத்துச் செல்வதென்றால் ஒரு போதும் மறுப்பு தொரிவிக்காமல் தமது களைப்பையும் பார்க்காமல் சேவை செய்கின்றார்கள். பிள்ளைகளுடன் நண்பர்கள் போல் பழகுவது பிள்ளைகளுக்கு மன ஆறுதலை ஏற்படுத்துகின்றது.

பல வகைப்பட்ட சூழ்நிலைகளில் இருந்து வந்த பிள்ளைகளை ஆற்றுப்படுத்தும் நோக்கில் உளவளவாளரின் ஆலோசனையும் வழிகாட்டலும் அமைகின்றது. ஏனைய பிள்ளைகளுடனான பரஸ்பர ஒற்றுமைக்கு வழிகோலுகின்றது. விசேடமாக வைத்தியர்கள் வருகை தந்து எமது பிள்ளைகளின் உடல் நலம் கவனிக்கப்படுவதுடன் ஒவ்வொரு பிள்ளைகளுக்குமாக தனித்தனி வைத்தியர் குறிப்பு கோவை பேணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இல்ல பிள்ளைகளின் பூப்புனித நீராட்டு விழா மற்றும் திருமண நிகழ்வுகள் மிகவும் கோலாகலமாக இடம் பெற்று வருகின்றது. சுமார் 15 பேருக்கு மேற்பட்டோர் இவ்வில்லத்தில் இருந்து திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் இல்லப் பிள்ளைகளுக்காக அமைக்கப்பட்ட துர்க்காதேவி வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடுகளைப் பெற்று தமது குடும்பத்துடன் இன்பமாக வாழ்ந்து வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் 9 வீடுகள் பூர்த்தியடைந்த நிலையில் 7 வீடுகளில் குடியமர்த்தப்பட்டும் இன்னும் பல வீடுகளை கட்டுவதற்கான முயற்சி நடைபெற்று வருகின்றது.

இத்தகைய இல்லத்தின் வளர்ச்சிக்கு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருபவர்களை நாம் எளிதில் மறந்து விட முடியாது. குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் இல்ல வளர்ச்சிக்காக மிகவும் பங்காற்றி வருகின்றார்கள். அவுஸ்ரேலியாவில் இருக்கும் அபயகரம் என்ற அமைப்பு ஆண்டுதோறும் சிறப்பு நிகழ்ச்சியை நடாத்தி பல இலட்சம் ரூபா பணத்தினை உதவி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமைப்புத் திட்டத்திற்கும் பிள்ளைகளின் உணவு, கல்வி மற்றும் பிள்ளைகளுக்காக மடிக் கணனிகளை அன்பளிப்பு செய்யும் அன்பு உள்ளங்களுக்கும் எமது இல்லப் பிள்ளைகள் இந்த மண்ணில் தலை சிறந்த பெரியவர்களாக உருவாக வேண்டும் என துர்க்கை அம்பாளை வேண்டுபவர்களுக்கும் இல்ல பிள்ளைகள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இல்லம் அரசாங்கத்தின் புதிய யாப்பு விதிகளின் படி இல்ல நிர்வாக விருப்பத்தின் படி 28- 05- 2018 லிருந்து விடுத்திசாலையாக மாற்றப்பட்டு துர்க்காபுர மகளிர் இல்லம் (சைவ ஆன்மிக விடுதிச்சாலை) யாக இயங்குகின்றது. எத்தனையோ சிறுவர் இல்லங்கள் தோன்றி இன்று மீல்லாமல் போய் விட்டது. அம்பாளின் கருணையால் துர்க்கபுரம் மகளிர் இல்லம் சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டு இருக்கின்றது. அச்சுடர் என்றும் அணையாது இருக்க அம்பாளை பிரார்த்திக்கின்றோம். இல்லத்தின் எழுச்சி கண்டும் இதனை ஏற்றி வைத்த இணையில்லாத இரு தலைமைகளைப் போற்றியும் இரவு பகல் பாராது இதற்காக உழைக்கும் தலைவர் ஐயா, நிர்வாக சபை, அதிபர், மேற்பார்வையாளர்கள், ஊழியர்கள், அனைவருக்கும் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் அறப்பணியினூடாக ஆலயங்கள் செய்யவேண்டிய பணிகளில் ஓர் அரங்கமாக எழுந்த எம் இல்லத்தை நல்ல முறையில் நிர்வகிப்பதற்காக இல்லப்பிள்ளைகள் என்ற வகையில் நன்றி கூறுவதுடன் இப்பணி தொடர இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**'என்றும் வேண்டும் இன்ப அன்பு'**

**குறிப்பு: துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 39ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

**நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்**
**ஏமாப்போம் பிணியியோம் பணிவோ மல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்ப மில்லை**
**தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான**
**சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமொன்று மீளா ஆளாய்க்**
**கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.**

ஆறாந்திருமுறை - திருநாவுக்கரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் தமிழர் இசைக்கருவிகள்: பகுதி 1 – எக்காளம்

சரவண பிரபு ராமமூர்த்தி,
புதுச்சேரி இந்தியா.

தமிழ் மொழி தோன்றிய பொழுதே தமிழிசையும் தோன்றிவிட்டது. தமிழர் வாழ்வோடு இணைந்தே பயணம் செய்வது இசை. தமிழர் பிறப்பு முதல் இறப்பு வரை இசையுடனே பயணித்தனர். ஆதி மனிதன் தான் வேட்டையாடிய விலங்குகளின் மாமிசத்தை உண்டு தோல்களை அங்கும் இங்கும் போட்டு வைத்த பொழுது, அது காய்ந்து அதன் மீது மழை பட்டு எழுந்த ஓசையே தோல் கருவிகளின் துவக்கம் என்று இசை ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பின்பு காய்ந்த எலும்புகளை ஊதும் பொழுது எழுந்த இசையே காற்று கருவிகளின் துவக்கம் என்றும் சொல்கிறார்கள். பின்னர் விலங்குகளின் நரம்புகளில் இருந்து நரம்பிசை கருவிகளும் செய்தான். காற்றுக்கருவிகளின் முன்னேற்றமாக துளையிட்ட ஊதுகருவிகளை கண்டுபிடித்தான். நாகரிகம் அடைந்த மனிதன் கஞ்சக்கருவிகளை உலோகத்தில் செய்தான்.

பழந்தமிழர்கள் எண்ணற்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளார்கள். 500க்கும் மேற்பட்ட தமிழர் இசைக்கருவிகள் இருந்துள்ளன. சிலப்பதிகாரம், மலைபடுகடாம், மற்ற சங்க தமிழ் நூல்கள், திருமுறை, திவ்யப்ரபந்தம், கந்தபுராணம் ஆகிய நூல்கள் பலவும் பலவாறான இசைக்கருவிகளின் பெயர்களை நமக்குக் காட்டுகின்றன. இன்றைய காலகட்டத்தில் ஒரு 50- 60 கருவிகளை தான் நம்மால் இனம் காண இயலுகிறது. அதிலும் நாதசுரம், தவில், பறை தவிர பல கருவிகளும் அழிவின் விளிம்பில் இருப்பவை. குறிப்பாக பழங்குடி மக்களின் இசை வடிவங்கள் முற்றாக அழிந்து வருகிறது.

தான் பயன்படுத்திய இசைக்கருவிகளைத் தமிழன் கடவுளுக்கு அர்ப்பணித்தான். தமிழரின் நாட்டார் தெய்வ வழிபாட்டில் இசைக்கருவிகள் முக்கிய இடம் பிடித்தன. நிறுவன சமய கோவில்களிலும் தமிழனின் இசை ஒலித்தது. ஆனால் அது நெடுநாள் நிலைக்கவில்லை. தமிழன் சாதிவாரியாக பிரிந்த நேரத்தில் தமிழர்களின் இசைக்கருவிகளும் சாதிய அடையாளம் பெற்றன. மனிதன் போலவே இசையும் தீட்டானது. நிறுவன சமய கோவில்களில் இருந்து பறை தப்பு போன்ற தமிழர் கருவிகள் வெளியேற்றப்பட்டன. பறையும் அதை இசைத்தவனும் தீட்டானான்.

இத்தொடர் தமிழரின் இசைக்கருவிகளை உங்களுக்கு அறிமுகப்படுத்தியும் ஏற்கனவே அறிந்தவர்கள் மீண்டும் நினைவு கூறவும் உதவும் என்று நம்புகிறேன். இவைகளை படித்து நமது இசைக்கருவிகளை நமது பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்வோம். மேலும் அடுத்த முறை நாம் இவை புழக்கத்தில் இருக்கும் கோவில்களுக்கும் ஊர்களுக்கும் செல்லும்பொழுது அக்கருவிகளை கண்டு வரவும் உதவும். இக்கருவிகளை இசைக்கும் நலிவுற்ற கலைஞர்களை ஊக்கப்படுத்தி

(தொடர்ச்சி - 23ம் பக்கம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை
## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J. P அவர்களின்
## 96 வது பிறந்தநாள் அறக்கொடை விழா நிகழ்வுகள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காளம் இசைக்கும் கலைஞர்




மாசிமக இலட்சார்ச்சனை- 2021



மணவாளக் கோலத் திருவிழா- 2021



மாசிமக திருவிழா



தலைவாசல் கோபுரத்திற்கான நிலையம் குறித்தல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மால் இயன்ற சன்மானம் அளிக்கலாம். இனி தமிழிசை கருவிகளில் ஒன்றான எக்காளத்தை பற்றி இந்த முதல் பகுதியில் பார்போம்.

மிகப்பெரிய இசைக்கருவிகளில் ஒன்று எக்காளம். ஊத ஒரு சிறிய துளை, காற்று வெளியேற ஒரு பெரிய புனல் இருக்கும் இரண்டு முதல் நான்கு பித்தளை அல்லது தாமிரக் குழல்கள் சேர்ந்து அடி குழலில் வாய் வைத்து ஊதும் துளையுடன் கூடிய இசைக்கருவி எக்காளம். பழமையான எக்காளம் சுமார் ஆறு அடி நீளம் இருக்கும். அடிப்பகுதி யானையின் கால்கள் போல் விரிந்து இருக்கும். விரிந்த இந்த பகுதிக்குக் கங்கில் என்று பெயர். அதனுடன் மோதிரங்கள் என்று அழைக்கப்படும் வளையங்கள் பொருந்திய குழல் பகுதியை இணைத்து இசைக்கப்படும். கைலாய வாத்தியக் குழுவினர் பயன்படுத்தும் எக்காளம் இதை நோக்கும் பொழுது மிகவும் சிறிய அளவில் இருக்கும்.

எக்காளம் ஊதுவது வெற்றியின் அடையாளமாக கருதப்படுகிறது. பழங்காலத்தில் பகையரசரை வென்ற மன்னர் எக்காளம் இசைத்து வெற்றியை அறிவித்து மகிழ்வர். இதன் நீழ்ச்சி தான் எக்காளமிடுகிறான் பார் என்கிற சொல்லாடல். காகளம்(கந்தபுராணம்), காளம் என்றும் இக்கருவி வழங்கும். வடமொழியில் காஹளம் என்று திரிந்துள்ளது.

ஆலய வழிபாட்டு ஊர்வலங்களிலும் இது தொன்மையாக இசைக்கப்படுகின்றது. சீர்காழி அடுத்த திருநாங்கூர் 11 கருட சேவை திருவிழாவில் (இது தை அமாவாசைக்கு மறுநாள் நடைபெறும்) பெரிய எக்காளம் இசைக்கப்படும் (ஜனவரி 2020). மயிலாடுதுறை அடுத்த ஆக்கூரை சேர்ந்தவர் திரு. சி. நா வைரக்கண்ணு அவர்கள் 88 வயதாகும் இவர் தான் திருநாங்கூர் விழாவில் சுமார் 50 ஆண்டுகளாக எக்காளம் இசைக்கிறார். இவர் வைத்திருக்கும் எக்காளம் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது. நம்மால் தூக்கக் கூட முடியாத எக்காளத்தை இவர் தூக்கி அதை தம் பிடித்து ஊதுவது ஒரு அதிசயம் தான். மயிலாடுதுறை வட்டாரங்களில் நடைபெறும் குடமுழுக்கு, தேரோட்டம் போன்ற நிகழ்வுகளுக்கு இந்த மூத்த இசைக்கலைஞரை அழைக்கிறார்கள். பெரிய வருமானம் இல்லை. இருந்தாலும் இந்த மரபு அழியக்கூடாது என்று கருதி தனது 88 வயதிலும் எக்காளத்துடன் கிளம்பிவிடுகிறார் இந்த ஐயா எனது தகப்பனார் காலத்து எக்காளம் இது எக்காளமும் நமரியும் ஒன்றாக இசைப்போம். 88 வயதிலும் இசைக்கிறேன். நான் இருக்கும் வரை இசைப்பேன். என்று உறுதிபட கூறுகிறார் வைரக்கண்ணு அவர்கள் தஞ்சை அடுத்த சுந்தர பெருமாள் கோயில் என்கிற ஊரிலும் சில எக்காள கலைஞர்கள் உள்ளனர்.

திருவரங்கம் கோவிலில் நம்பெருமாள் கருவறையில் இருந்து புறப்படும் வேளையில் பெரிய வெள்ளி எக்காளங்கள் இசைக்கப்படுகின்றன. பரமபத வாசல் திறக்கும் வேளையிலும் இது இசைக்கப்படும். திருவரங்கத்தில் எக்காளத்தின் அளவை கருதி அது இசைக்கப்படும் பொழுது கீழே விழாமல் இருக்க ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கம்புடன் சேர்த்து கட்டப்பட்டு தரையில் நிறுத்தப்படும். நான் பார்த்த எக்காளங்களில் இது தான் மிகப்பெரியது. நாட்டார் தெய்வ வழிபாடு மற்றும் விழாக்களிலும் எக்காளம் ஊதும் வழக்கம் உள்ளது.

மன்னர்கள் காலத்தில் இந்த இசைக்கருவி செல்வாக்குப் பெற்று திகழ்ந்தது. ஆலயங்கள் அனைத்திலும் எக்காளம் இசைப்பவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு நிலமும் ஊதியமும் வழங்கப்பட்டது. தஞ்சை பெருவுடையார் கோவிலுக்கு மாமன்னன் ராசராசன் பொன்னாலான சுமார் 13 எக்காளங்களைச் செய்து கொடுத்துள்ளார். தஞ்சை பெரிய கோவிலின் கல்வெட்டு ஒன்றில் "சிவபாதசேகரனென்றும் ஸ்ரீ ராஜராஜனென்றும் திருநாமம் வாங்கி கங்கில் ஒன்றும் குழல் இரண்டும் மொதிரம் ஐஞ்சும் உடைய பொன்னின் காளங்கள்" என்கிற கல்வெட்டுத் தொடரில் 13 எக்காளங்களை தங்கத்தில் செய்த செய்தி குறிக்கப்பட்டு அதன் எடை அளவுகளும் அதில் குறிக்கப்பட்டுள்ளன. இந்த எக்காளங்களை வெற்றிக்கொண்ட பகை அரசர்களின் பொன்னில் இருந்தும், தனது சொந்த பொன்னில் இருந்தும் ராசராசன் செய்துள்ளதாக அந்த கல்வெட்டு தெரிவிக்கின்றது. திருவொற்றியூர் கோவிலில் உத்தம சோழதேவர் காலத்தில் கவரிப்பிணாக்கள் (கவரி வீசுபவர்) இருபத்து நால்வரும் எக்காளம் ஊதுபவர் எண்மரும் இருந்தனர் என்று அக்கோவில் கல்வெட்டு கூறுகிறது. திருவெண்ணெய்நல்லூரில் உள்ள கோப்பெருஞ் சிங்கனின் 26ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு சிறுபுத்துருடையான் பெருமாள் பழவாவணச் சொக்கன் என்பவர் வெள்ளி எக்காளங்கள் செய்து கொடையளித்தமை கூறப்படுகிறது. "காளம் ஊதுவார் நால்வர்க்கு ஆளாள் ஒரு மாவாக நிலன் நாலு(மாவும்)" என்பது பாளையங்கோட்டையில் உள்ள வீரநாராயண பெருமாள் கோவிலில் உள்ள கல்வெட்டு குறிப்பு. இதன் மூலம் திருப்பள்ளி எழுச்சியின் போது சாமம் கொட்டவும், எக்காளம் ஊதவும் மொத்த 26 உவச்சருக்கு முதலாம் இராசராசனின் 22ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1007) நிலதானம் வழங்கப்பட்டுள்ள செய்தி நமக்கு தெரிகின்றது. மேலும் எக்காளம் இசைக்க மானியம் அளித்தது பற்றிய செய்திகள் சீனிவாசநல்லூர், சோழமாதேவி, திருநெடுங்களம், வேள்விக்குடி, விசயமங்கை உள்ளிட்ட பல தமிழக கோவில் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. தமிழ்நாட்டில் இப்படி மன்னர்கள் ஆதரித்த எக்காளம் இன்று மக்களின் ஆதரவின்றி அழிவின் விளிம்பில் உள்ளது பெருந்துயரம். விரல் விட்டு எண்ணும் அளவில் தான் இக்கலைஞர்களின் எண்ணிக்கை உள்ளது. அவர்களின் சன்மானம் 300-500 இந்திய ரூபாய்களுக்குள் தான். எக்காளம் எக்காலத்திலும் ஒலிக்குமா?

**இக்கருவி புழக்கத்தில் உள்ள இடங்கள்**

• திருவரங்கம் அரங்கநாதர் கோயில் (இங்கே மிகப்பெரிய வெள்ளி மற்றும் சிறிய பித்தளை எக்காளங்கள்)

• மன்னார்குடி இராசகொபால பெருமாள் கோவில் (இது சற்று நடுத்தர வகை எக்காளம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• திருநாங்கூர் 11 கருட சேவை திருவிழா (இது தை அமாவாசைக்கு மறுநாள் நடைபெறும்)

• மயிலாடுதுரை அடுத்த ஆக்கூர் (தொழில் முறை கலைஞர் சி. நா. வைரக்கண்ணு)

• தஞ்சை சுந்தர பெருமாள் கோயில் (தொழில் முறை கலைஞர்கள்)

• நாட்டார் தெய்வ விழாக்கள்

இக்கருவிக்குரிய படத்தை 22ஆம் பக்கத்தில் காணலாம்.

**இக்கருவி குறித்த பாடல்கள் சில:**

**சங்கொடு தாரை சின்னம் தனிப்பெரும் காளம் தாளம்**
**வங்கியம் ஏனை மற்றும் மலர்துளைக் கருவி எல்லாம்**
**பொங்கிய ஒலியின் ஓங்கிப் பூசுரர் வேத கீதம்**
**எங்கனும் எழுந்து மல்கத் திருமணம் எழுந்தது அன்றே** – பெரியபுராணம் - 3102

**வேள்வி உள்மடுத்தலும் விரை கமழ் நறும் புகை**
**காளங்கள் வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர்**
**ஆள்மின்கள் வானகம் ஆழியான் தமர் என்று**
**வாள் ஒண் கண் மடந்தையர் வாழ்த்தினர் மகிழ்ந்தே** - நம்மாழ்வார், திருவாய்மொழி

### முத்தி

பேரியக்க மண்டலம்- சூரியவெளி, சுத்தவெளி- பிரபஞ்சம், அணுஇயக்கம்- காந்தம், காந்தவெளி. உயிர்கள் 84 லட்சம் உடல்களை எடுக்கும். இறந்து பிறக்கும் உயிர்களில் மனித உடல் பெற்ற உயிருக்கு பகுத்தறிவு உள்ளதால் மீண்டும் இறைநிலை அடைய மனிதன் ஆசைப்பட வேண்டும். சில உயிர்கள் பந்த பாசங் காரணமாக மீண்டும் உறவுகளை நாடி மண்ணில் வந்து உடல் எடுக்கும். அதனால் மனதை உயிர் மையத்தை எண்ணி தியானித்தால் உயிராக நமது உடலில் கலந்துள்ள சக்தி நமது மன ஆற்றலால் ஜீவகாந்த சக்தியாக மாறி இறைநிலை அடைய மீண்டும் இறைவனுடன் சேர்தல் முத்தி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

**பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஸ்ண ஐயர்,**
வாழ்நாட்பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திருக்கோயில்களின் தலைவாயிலில் வானளாவ உயர்ந்து விளங்கும் கோபுரங்கள் தூலலிங்கம் என்ற சிறப்புப் பெறுவன. கோயிலின் கம்பீரத் தோற்றத்திற்கும் வனப்பிற்கும் கோபுரங்களே காரணமாகின்றன.

'கால்க லாற்பயனென் - கறை கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோர ணஞ்சூழாக் கால்களாற் பயனென் '

என்ற நாவுக்கரசரின் வாக்கு கோபுரத்தின் மகிமையைக் கூறுகின்றது. கோபுரத்துடன் கூடி விளங்கும் கோயில்தான் எல்லா நிலைகளிலும் நிறைவு பெற்றதொன்றாக அமையும். எனவே கோபுரம் கோயில்களுக்குரிய இன்றியமையாத அங்கமாக விளங்குகின்றது. கலைச்சிறப்பும் தத்துவ மகிமையும் கொண்டு மிளிர்வன கோபுரங்கள்.

திருக்கோயிலில், கர்ப்பகிருகம், விமானம், மண்டபங்கள், பிராகாரம் போன்ற பல்வகை அம்சங்களும் சிறப்படைவதற்குத் தலைவாயிலில் சிறந்து விளங்கும் கோபுரமே துணைசெய்கின்றது. எனவே இக்காரணம் பற்றியே பண்டைய நாட்களில் மன்னர்கள் தாம் எழுப்பிய கோயில்களில் கோபுரங்களையும் சிறப்பாக அமைத்தனர். கோபுரத்தின் அமைப்பில் சிறந்ததொரு தத்துவம் உள்ளது. பூமியிலே ஆழ்ந்தும் அகன்றும் ஆகாய வெளியிலே உயர்ந்தும் விளங்குவது கோபுரமாகும். மூலத்தானத்துள் அமைந்து விளங்கும் சூக்குமலிங்கம் நித்திய நைமித்தியக் கிரியைகள் நிகழும் போது அடியார்கள் உள்ளே நின்று வழிபடுவதற்குரியது. சூக்குமலிங்கம் ஒரு கோயிலில் எழுந்தளி அருள்பாலிக்கம் மூர்த்தியை அறிந்துகொள்ள ஏதுவாகின்றது. கொடிமரத்தடியில் அமைந்து விளங்குவது பத்திரலிங்கம் ஆனால் தூலலிங்கமெனச் சிறப்புப் பெறும் கோபுரமோ துலாம்பாரமாகத் தூரத்தே நின்று கைதொழுது வழிபடுவதற்கும். வசதிக் குறைவான காலங்களில் கோயில் தரிசனம் செய்ய முடியாத வேளைகளில் வழிபடுவதற்கும் பெருந்துணை புரிவது இவ்வாறு சகல நிலைகளிலும் சிறப்புப் பெறும் கோபுரத்தை ராஜகோபுரம் என்றழைப்பர். இறைவனது சாந்தித்தியம் கோபுரத்திலும் நிறைந்து விளங்கும்.

தென்னாட்டிலும் ஈழத்திலும் காலங்காலமாக எழுச்சி பெற்றுவரும் திருக்கோயில்களில் கோபுரங்கள் எமது பண்பாட்டுச் சின்னமாக விளங்கி உலகளாவிய நிலையில் எமது பண்பாட்டுப் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன.

தமிழ் நாட்டிலே உள்ள கோயில்களில் கோபுரங்கள் தான் அடியார்களை வரவேற்று நிற்கின்றன. கோபுரத்தை தரிசித்த மாத்திரத்தில் பரம்பொருளின் தெய்வீகப் பெருமை எமது உள்ளங்களில் குடிகொண்டு விடுகின்றது. கோயில் என்றால் கோபுரமே எனக் கூறக்கூடிய அளவுக்குத் தமிழகத்தில் உள்ள கோயில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோறும் வானளாவ ஓங்கி நிற்கும் வகையில் கோபுரங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே கோயில் எழுந்த சூழலில் தெய்வீக மணங் கமழச் செய்வனவாக இவை விளங்குகின்றன.

கோயிலின் வாயிலை அலங்கரித்து நிற்கும் கட்டிட அமைப்பாகிய கோபுரத்தின் வரலாறு சுவையானதொன்று தமிழகத்திலே கோயிற் கட்டிடக்கலை சிறப்பாக பல்லவர் காலத்திலிருந்து தான் மேன்மையடைகின்றது. மிகவும் தொன்மையான கோபுரம் எனக் குறிப்பிடத்தக்கவை பல்லவமன்னன் இராஜசிங்கன் எடுத்த கோயில்களில் தான் காணப்படுவதாக அறிஞர் கருதுவர் காஞ்சி கைலாசநாதர் கோயிலும் மாமல்லபுரத்தில் எழுந்த கடற்கரைக் கோயிலிலும் மிகச்சிறிய கோபுரங்கள் உள்ளன. இக் காலக் கோயிற் கட்டிட அமைப்பில் நாம் காணும் சிறப்பம்சம் யாதெனில் கருவறையை அலங்கரிக்கும் விமானம் உயரமாகவும் கோபுரம் மிகச் சிறியதாகவும் அமைந்து விளங்குவன வாயிலில் மேற்பகுதியில் ஒரு சிறிய துவாரசாலை மட்டும் காணப்படக்கூடியது.

பல்லவ மன்னர்களையடுத்து கோயிற் திருப்பணிகளில் தம்மைச் சிறப்பாக ஈடுபடுத்திய பேரரசர்கள் நிர்மாணித்த கோயில்களில் கோபுரங்கள் விமானங்களைவிடச் சிறியவையாகக் கட்டப்பட்டன. சில கோபுரங்களின் கீழ்ப்பகுதி கருங்கல்லாலும் மேற்பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டு விளங்குகின்றன. சோழர் காலத்தில் இராஜராஜ சோழனின் காலம் சிறப்பு வாய்ந்தது. இவன் எடுப்பித்த தஞ்சைப் பெருங்கோயில் ஒரு புதிய மரபைக் கொண்டு விளங்கியது. இவனுடைய காலத்திலும் கருவறையின் மேல் உள்ள விமானம் உயர்த்தியே கட்டப்பட்டதாயினும் அதன் முன்னர் இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளியில் உள்ளது உயரமாகவும் உள்ளே உள்ளது உயரம் குறைவாகவும் கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. இக்கோயில் கோபுரங்கள் திருவாயில் என்ற பெயர் பெற்றன. விமானத்தின் முன்னர் இரு கோபுரங்களை அமைப்பது சோழர் காலத்தில் முக்கிய மரபாக இருந்தது. இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து கோயிலின் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்பப்பெறும் மரபும் தொடங்கியது. எடுத்துக்காட்டாக தில்லையில் நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் 12ம், 13ம், நூற்றாண்டுகளில் கட்டப்பட்டன. இவை ஏழுநிலைக் கோபுரம் என்ற சிறப்புப் பெயர் பெற்றன. அடிப்பகுதி அகன்று பரந்து விளங்கிய நிலையில் இக்கோபுரங்கள் சுமார் 100 அடி உயரம் எழுந்தன.

இத்தகைய கோபுரங்களில் கீழ்ப்பகுதியில் பல பரிவார தெய்வங்களின் உருவங்களும் மேற்பகுதியில் முக்கிய தெய்வத்தின் பல தோற்றங்களும் சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன. கோபுரத்தின் நுழைவாயிலின் இருமருங்கும் உள்ள நிலைக்கால்களில் பரத நாட்டியக் கரணங்கள் சிற்பங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

சோழர் காலத்தையடுத்து தமிழகத்தையாண்ட விஜயநகரப் பேரரசு மன்னர்கள் கோபுரங்களையமைக்கும் பணியில் பல சிறப்பம்சங்களைப் புகுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் புகழ் வாய்ந்த கோயில்கள் அனைத்திலும் மிகவுயர்ந்த கோபுரங்களை எழுப்பினர். கோயிலின் வாயிலில் இத்தகைய வானளாவ எழுந்த கோபுரங்கள் பெரும் வனப்பையும் கம்பீரத்தையும் எடுத்துக்காட்டின. காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் இவைபோன்ற கோபுரங்கள் எழுந்தன. விஜயநகர மன்னர் வரிசையில் கோபுரப் பணியில் சிறந்து விளங்கியவர் கிருஷ்ண தேவராயர் ஆவார். இவர் 180 அடி உயரத்திற்கு மேல் கோபுரங்களை எழுப்பியவர். இவரது கோபுரங்கள் ராயர் கோபுரம் என்று அழைக்கப்படலாயிற்று. எனவே இக்காலப் பகுதியைக் கோயிற் கட்டடக்கலை வரலாற்றில் கோபுர காலம் எனக் குறிப்பிடலாம். இம்மன்னர்களது பிரதிநிதிகளாகிய நாயக்க மன்னர்களும் உயர்ந்த கோபுரங்களை எழுப்பியுள்ளனர். திருமலை மன்னர் மதுரையில் எழுப்பிய கோபுரத்தில் எண்ணற்ற அழகிய சுதை உருவங்களை வைத்து தனது தெய்வீக பக்தியை வெளிப்படுத்தியுள்ளான். இன்றும் இத்தகைய கோபுரங்கள் காண்போரின் உள்ளங்களில் தெய்வீகப் பெருமையும் வரலாற்றுப் புகழையும் உணர்த்தி நிற்கின்றன.

கோபுரங்கள் புராண இதிகாசகதைகளைக் கட்புலனாக்கும் பெற்றி வாய்ந்தன. அவற்றில் இடம்பெறும் சிற்பங்கள் தெய்வீக வரலாறு, கலை, தத்துவப்பொருள் ஆகியவற்றை விளக்கி நிற்கின்றன. கோபுரங்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று, பதின்மூன்று ஆகிய நிலைகளைக் கொண்டு விளங்குவன. கோபுரத்தின் முடியில் இத்தகைய எண்ணிக்கையைக் கொண்ட கலசங்கள் அமைத்து கும்பாபிஷேகங்கள் நிகழ்த்தப்படுகின்றன. கோபுரங்களில் பெரும்பாலானவை ஐந்து மாடங்களாகிய நிலைகளைக் கொண்டன. தலைவாசலும் ஐந்து மாடங்களுமாய ஆறு அமைப்புக்களும் உடம்பின் ஆறு ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகியவற்றைக் குறிப்பனவாகும். இந்துக் கோயில்களை அலங்கரிக்கும் கோபுரங்கள் ஆகமங்கள் விதித்துக் கூறும் திருக்கோயில் அமைப்பின் பூரணத்துவத்தையும் பெருமையையும் எடுத்தியம்புகின்றன.

மதுரை ஸ்ரீ மீனாட்ஷியம்மன் ஆலயத்தின் கோபுரங்கள் வரலாற்றுப் புகழோடு கலைச் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. அம்பிகையின் ஆலயத்திற்கு முன் அமைந்து விளங்கும் கோபுரம் ஏழுநிலைக் கோபுரமாகும். 740 சுதை விக்கிரகங்களைக் கொண்டது. ஏறக்குறைய 117 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 78 அடி நீளமும் 38 அடி அகலமும் கொண்டது. எண்ணற்ற கலையெழில் கொண்ட சிற்பங்களினால் இது 'சித்திரக் கோபுரம்' என அழைக்கப்படுகின்றது. இக்கோயிலின் நாற்புறமும் நான்கு கோபுரங்கள் அலங்காரத்துடன் காட்சி தருகின்றன. ஒவ்வொன்றும் ஒன்பது நிலைகளைக் கொண்டது. இப்பிரதான கோபுரங்களுள் தென்புறத்தில் உள்ள கோபுரமே உயரத்தில் கூடியது. நிலமட்டத்திலிருந்து 160 அடி உயரமுள்ளது. கோபுரத்தின் அடிப்பகுதி 108 அடி நீளமும் 67 அடி அகலமுடையது. ஏறக்குறைய 1511 சுதைச் சிற்பங்கள் தெய்விகப் பெருமைகளை விளக்கி நிற்கின்றன. மேற்குக் கோபுரம் 154 அடி உயரமானது. இதன் அடித்தளம் 101 அடி நீளமும் 63 அடி அகலமுமாகும். ஏறக்குறைய 1124 சுதைச் சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பங்கள் உள்ளன. வடக்குக் கோபுரம் மொட்டைக் கோபுரம் என அழைக்கப் படுகின்றது. கிழக்குக் கோபுரம் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் நிர்மாணிக்கப் பட்டதாகும். (1216- 38) எனவே இதனை சுந்தரபாண்டியன் கோபுரம் என அழைப்பர். இக் கோபுரம் 153 அடி உயரமும், அடித்தளம் 111 அடி நீளமும் 65 அடி அகலமும் கொண்டு விளங்குகின்றது. ஏறக்குறைய 1101 சுதைச் சிற்பங்கள் இக்கோபுரத்தை அலங்கரிக்கின்றன. இவ்வாறு கோபுரத்தின் சிறப்புக்களை அறிய மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மையின் ஆலயம் சிறந்ததொன்றாக விளங்குகின்றது.

அண்மைக் காலத்தில் கோபுர வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீரங்கம் இராஜகோபுரமுமாகும். ஆசியாவிலேயே உயரமான கோபுரமென புகழத்தக்க பெருமை கொண்டது. அடியார்களைக் கருவியாக்கி அரங்கன் நிகழ்த்திய சாதனை என்று அனைவரும் பெருமைப்படத்தக்க கோபுரமிதுவாகும். ஸ்ரீரங்கம் தெற்கு வாசலில் உள்ள இக்கோபுரம் பதின்மூன்று நிலைகளைக் கொண்டது. கோபுரம் 236 அடி உயரம் கொண்டது. கிழக்கு மேற்கில் 165 2/3 அடி அகலமும் தெற்கு வடக்கில் 97 அடி அகலமும் கொண்டது. பதின்மூன்று செம்புக் கலசங்களில் ஒவ்வொன்றும் 10 1/2 அடி உயரமும் 5 1/2 அடி பருமனும் 135 கிலோ கிராம் எடையும் கொண்டது. 1979 மே மாதம் முதல் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ஒவ்வொரு நாளும் சுமார் இருநூறு கலைஞர்களும் தொழிலாளர்களும் இணைந்து உழைத்து இவ்வரும் பெரும் திருப்பணியை நிறைவேற்றியுள்ளனர். இத்தகைய விபரங்கள் திருக்கோயிற் கோபுரத்தின் பெருமையினை எமக்கு அறிவுறுத்துகின்றன.

கோபுர அமைப்பில் கர்ப்பக்கிருக அளவுக்கும் திருக்கோயிலின் நீள அகல உயரங்களுக்கும் பொருத்தமாகவே திருக்கோபுரம் அமைய வேண்டும்மென்பது சிவாகமவிதி. கோபுர நிலையில் இரு அமைப்புக்கள் உள்ளன. கோபுரத்தின் நான்கு மூலைக் கோணங்களும் நேர்கோடாக அமைவது ஒருவகை. அம்மூலைக் கோணங்கள் நேர் கோட்டிலமையாது உள்ளே சற்று வளைந்து அமைவது இன்னொரு வகை திருக்கோயிலின் தன்மைக்கும் வளத்திற்கும் ஏற்ப கோபுரங்களின் உயர அளவுகள் அமைவதும் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலே ஊரின் கண் வாழும் மக்களுக்கு சமய உணர்வைத் தூண்டவல்ல கோபுரங்கள் ஆலயங்கள் தோறும் எழுந்ததைப் போன்று ஈழநாட்டின் கண்ணும் ஆலயங்கள் தோறும் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. திருக்கேதீஸ்வரம், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நல்லூர்க் கந்தன், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், நயினை நாகபூசணி, காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி, வண்ணை வெங்கடவனின் ஆலயம், நாச்சிமார் கோயில் போன்ற ஆலயங்களின் கோபுரங்கள் எழில்மிகு தோற்றத்துடன் காட்சி தருகின்றன. ஈழத்துச் சிதம்பரம் போன்ற பல ஆலயங்களில் கோபுரத் திருப்பணி நடந்தேறி வருகின்றன.

ஆலயத்தில் இறைவனுக்கென கோபுரம் அமைத்தல் எமது பொருளை அருளாக்கும் புண்ணியத் திருப்பணி எனில் மிகையில்லை. கலையைப் பேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகைக் கலைப் பணியாகவும் அமைகின்றது. அருள் நெறிக்கும் ஆன்ம நெறிக்கும் மக்களை ஆற்றுப்படுத்தவல்ல தெய்வத் திருப்பணி. இத்தகு திருப்பணியில் எமது வாழ்வில் ஒருமுறையாவது எம்மை ஈடுபடுத்திக் கொள்வதே எமக்குக் கிடைத்த அருட்பேறாகும். அதனைப் பயன்படுத்தி அத்திருப்பணியில் பங்கு கொள்ளுதல் நம் அனைவரதும் கடமையாகும் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் நல்கும். அத்துடன் எமது வாழ்க்கைக்கும் நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாகும். இத்தகைய பெருமைபெற்ற கோபுரத் திருப்பணியில் நாம் பங்கு கொண்டு திருவருட் பாத்திரராவோமாக.

(நன்றி: அனலைதீவு எழுவடிவயல் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம் - இராஜகோபுர கும்பாபிஷேக மலர்)

## கடவுள்

உலகமாவது சித்தும் அசித்துமென இருவகைப்படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள். அசித்து அறிவில்லாத பொருள். அசித்தென்றாலும், சடமென்றாலும் பொருந்தும். உலகம் தோன்றி நின்று அழியுங் காரியமாய் உள்ளது. ஆதலினால், உலகத்தைப் படைதல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையுஞ் செய்வதற்கு ஒரு கடவுள் இருக்கிறார் என்பது, நன்றாக நிச்சியிக்கப்படும்.

கடவுள் என்றும் உள்ளவர், அவருக்கும் பிறப்பும், இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர். அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிபவர், அவர் அறியாதது ஒன்றும் இல்லை. அவருடைய அறிவு இயற்கையறிவு, ஒருவர் அறிவிக்க அறிபவர் அல்ல. அவர் எல்லாம் வல்லவர், அவரால் இயலாத கருமம் ஒன்றும் இல்லை. அவர் அளவிடப்படாத ஆனந்தமுடையவர், தம்முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவரல்லர். அவர் தம்வயமுடையவர், பிறர்வயமுடையவரல்லர். அவர் உயரும் ஒப்பும் இல்லாதவர், அவரின் மேலானவரும் இல்லை. அவருக்கும் சமமான வரும் இல்லை. அவர் சகல லோகத்திற்கும் ஒரே நாயகர். அவர் செய்யுந் தொழில்களுள் ஒன்றாயினும் அவருடைய பிரயோசனத்தைக் குறித்ததன்று. எல்லாம் ஆன்மாக்களுடைய பிரயோசனத்தைக் குறித்தவைகள். அவர் ஆன்மாக்களிடத்திலுள்ள கைம்மாறில்லாத அளவு கடந்த திருவருளே திருமேனியாக உடையவர்.

கடவுள் ஆன்மாக்கள் பொருட்டு வேதம், ஆகமம் என்னும் முதனூல்களை அருளிச் செய்தார். அவைகளிலே விதிக்கப்பட்டவைகளெல்லாம். புண்ணியங்கள் விலக்கப்பட்டவைகளெல்லாம் பாவங்கள். அவர் புண்ணியத்தைச் செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவத்தையும் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையும் கொடுப்பார். துன்பத்தைக் கொடுத்தலினால் அவரை வன்கண்ணரென்று கொள்ளலாகாது. தீமை செய்த பிள்ளைகளை பிதா மாதாக்கள் தண்டித்தலும், சில வியாதியாளர்களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும், இருப்புக்கோல் காய்ச்சிச் சுடுதலும், கண்ணிற்படலத்தை உரித்தலும் அவர்களிடத்துள்ள இரக்கத்தினாலன்றி வன்கண்மையினாலல்லவே. அதுபோலக் கடவுள் பாவஞ்செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல், அப்பாவத்தை ஒழித்து மேலே பாவஞ் செய்யாவண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கு ஏதுவாதலினால், அதுவும் கருணையேயாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்நெறியின் சாரமாய் இந்துமதம்

பூ. செல்வதியம்மா, B.A (Hons)
துர்க்காபுரம் மகளிர் இல்லம்.

நன்நெறி என்பது நன்மை பயக்கத்தக்க நல்ல ஒழுக்க நெறிகளைக் கூறுவது என கொள்ளப்படுகின்றது. இதனை நன்மை நெறி எனப்பகுத்து நன்மை பயக்கத்தக்க ஒழுக்க நெறியினைக் கூறவல்லது. என ஆன்றோர் கூறுவது மரபாகும். இதற்கு பலதரப்பட்ட வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்படுகின்றன. சமய ரீதியாக, தத்துவரீதியாக, இலக்கிய ரீதியாக எனப் பலதரப்பட்டன அதிலே பொருத்தமான வரைவினை நோக்கின்.

நன்நெறி என்பது ஒரு நெறி முறை அல்லது அறமுறை இது மெய்யியலின் ஒரு முக்கிய பகுதியும் கூட இது ஒருவரது நடத்தை தொடர்பில் சரி பிழை ஆகிய கருத்துக்களை முறைப்படுத்திப் பேணி, அவற்றைக் கைக் கொள்ளும் படி பரிந்துரை செய்வது இதன் முக்கிய அம்சம் நல்ல வாழ்வு என்பதாகும். இந் நன்நெறி வாழ்வு தனக்கும் ஏனையோர்க்கும் பயனுள்ளதும் திருப்தியளிப்பதுமாக அமைய வேண்டும்.

இந் நன்நெறியானது

1. மீநெறி முறை
2. கட்டுப்பாட்டு நெறிமுறை
3. பயன்பாட்டு நெறிமுறை
4. விளக்க நெறிமுறை

எனும் பிரிவிற்குள் அடக்கப் படுகின்றது. இத்தகைய நெறிமுறைக்குள் இந்து மதம் உட்படுகின்றதா? மெய்யியல் ரீதியாக 19ஆம் நூற்றாண்டில் பிரிக்கப்பட்ட இந் நெறிமுறைக்குள் இற்றைக்கு ஏறத்தாழ (1700) ஆண்டுகள் பழமையான எனச் சுட்ட இந்து மதம் அடங்குகின்றதா? அல்லாது விடின் இவர்கள் வகுத்த இந் நன்நெறியி ஏதேனும் ஒன்றாவது இந்து மதத்தில் விடுபட்டு விட்டதா? எனத்தர்க்க ரீதியில் சான்றுகள் கொண்டு காண்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

அந்த வகையிலே முதற்கண் இந்து மதம் என்றால் என்ன? எனும் சிறு அறிமுகத்துடன் அப்பாற் செல்லலாம். இந்து சமயம் இந்தியாவில் தோன்றிய காலத்தால் மிகவும் தொன்மையான சமயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்து என்ற சொல் சிந்து எனும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து ஈராணிய மொழியான பாரசீக மொழி மூலமாக உருவான ஒரு சொல் ஆகும். இந்து என்ற சொல் முதன் முதலில் பாரசீகத்தினரால் ஒரு புவியியல் சொல்லாக, அதாவது சிந்து நதிக்குக் கிழக்குக் பக்கம் வசிக்கும் அனைவரையும் சேர்த்துக் குறிக்கப் பயன்பட்டது. எனச் சுட்டப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழி அகராதியில் இந்து சமயம் என்ற சொல் சேர்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் இந்து மதம் தலையாய நான்கு இலக்குகளான அறம், பொருள், இன்பம், வீடு பேறு என பனவற்றை அடிப்படையாக கொண்டு அன்பு வழி இயங்கும் மதமாகவும் மார்க்கமாகும் திகழ்கின்றது. இதற்கு நல்ல ஓர் எடுத்துக் காட்டு இயற்கையினை இறைவனாகக் கொண்டு ஏனைய உயிர்களில் இறைவனைக் காண்கின்ற ஓர் அற்புத மதமே இந்து மதமாகும். இம் மதமான மெய்யியல் வகுத்து நன்நெறிகளைக் கொண்டு திகழ்கின்றதா? என்பதனை சான்றாதாரங்கள் கொண்டு தனித் தனியாக நோக்கின்,

1. மீ நெறிமுறை

இந் நெறிமுறையானது இயற்கையுடன் சம்பந்தமுடையதாக விளங்குகின்றது. மீ என்றால் இயற்கை, மேன்மை என்பது பொருள் அதன் படி இயற்கையினை மதித்து அதற்கு வணக்கத்தினை செலுத்தி அதனைப் பேணி பாதுகாக்கின்ற ஒரே ஒரு மதம் இந்து மதம் மட்டுமே.

இந்து ஆதியிலே தமக்கு அச்சத்தை விளைவிக்கின்ற தன்மையினால் கடைப்பிடிக்கப்பட்டாலும், இயற்கை சீற்றம் கொண்டால் மனிதன் வாழ முடியாது எனும் தன்மையினை தோற்றுவித்தது அதன் படி,

1. மர வழிபாடு
2. நீர் வழிபாடு
3. சூரிய வழிபாடு
4. சந்திர வழிபாடு
5. இந்திர வழிபாடு
6. நாக வழிபாடு
7. மலை வழிபாடு
8. நவகோள் வழிபாடு
9. பசு வழிபாடு

எனும் வழிபாடுகள் விஷேடமாக கருதப்பட்டன. அது இன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இங்கே நன்நெறி எங்கே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. எனும் கேள்வி எழும்பலாம் ஆம். 'இயற்கையினை அழிக்காதீர்கள்' என இருபத்தோராம் நூற்றாண்டில் துண்டுப் பிரசுரம் ஒட்டுகின்ற இவ் வேளையில் அவ் இயற்கையினை மதித்து அதனை வீண்விரயமாக்காது பாதுகாப்பது இந்து மதமாகும்.

இதற்கு நல்ல சான்று சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட புறநானூறுப் பாடலடி

'கள்ளி நிழல் கடவுள் வாழ்த்தி' (புற- பாடல்- 260)

இப் பாடலில் கள்ளிச் செடியில் நிழலில் கூட கடவுள் இருப்பது என்பது 'சூர் முதல் இருந்த ஓமையும் புறவு' (அக- பாடல்- 291)

எனும் பாடலில் ஓமை எனும் மரத்தின் அடியில் கடவுள் இருக்கின்றார். எனச் சுட்டப்படுகின்றது. இந்நிலையில் அன்றுமரங்கள் அழிக்கப்படவில்லை அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் இன்றம் வழிபாட்டுக்குரிய மரங்களை இந்துக்கள் வெட்டுவதில் உதாரணமாக வேம்பு, ஆல், அரசு, இலுப்பை என்பவற்றை குறிப்பிடலாம்.

அதே போல் நீர் நிலைகளை புண்ணிய நதிகளாக பாவிப்பார். கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதவரி, நர்மதை, சிந்து, காவேரி என அதனை தூய்மையாக வைத்திருப்பார். இந்துக்கள் நீர்கொண்டு வழிபடும் தன்மை இன்றும் நிலவுகின்றது. இவர்கள் நீரினை வீண்விரயம் செய்வதைத் தவிப்பர்.

உயிர்களை நேசிப்பர் இவர்கள் இயற்கையினை நேசித்து வழிபட்டு அதற்கு நன்றி செலுத்தும் நிகழ்விற்கு:

தைப் பொங்கல், பட்டிப் பொங்கல் என்பன சிறந்தஎடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இது மீ நெறிமுறையில் துலங்கும் நன்நெறியாகும். இதனை விட ஏராளமான விடயங்கள் உண்டு சான்றாதாரத்திற்காக விடயங்கள் காட்டப்பட்டுள்ளன. அடுத்து

2. கட்டுப்பாட்டு நெறிமுறை

கட்டுப்பாட்டு நெறிமுறை என்பது ஒழுக்க நெறிமுறையாக விளங்குகின்றது. இது மனிதனது உளவியல் சார்ந்ததாகவும், புலக்கட்டுப்பாட்டைச் சார்ந்ததாகவும் அமைகின்றது. இந் நிலையானது இந்து மதத்தில் ஆசாரமாகவே கணிக்கப்படுகின்றது. அதற்கான சிறந்த எடுத்துக்கட்டாக பின்வருவனவற்றைக் காணலாம்.

பஞ்சமா பாதகம் தவிர்த்தல், ஒருவனுக்கு ஒருத்தி திருமணபந்தம் விரதமிருத்தல், தவம் செய்தல், தேவார திருப்பதிகங்களை இசைத்தல், தலையாத்திரை செல்லல் எல்லாவற்றிற்கும் மேலே துறவறம் செல்லுதல் என்பன மனிதன் கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்கான வழிமுறைகளை காட்டுவதாக அமைகின்றது.

மனுஸ் மிருதியானது பஞ்சமா பாதங்களைச் செய்தால் அவர்கள் எத்தகைய தண்டனைக்கு அளாவார்கள் எனச் சுட்டுகின்றது. இதனை வேறு பல இலக்கியங்களும் கற்பிக்க தவறவில்லை

ஆன்முலை அறுத்து அறனிலோர்க்கும்
மாணிழை மகளிர்க் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர் தப்பிய கொடுமையோர்க்கு... (புற- பாடல்-34)

எனும் பாடல்களில் பசுவின் மடிகளை அறுத்தவர், பெண்கள் கருவை சிதைத்தவர், பெற்றோரைத் துன்புறுத்தியவர்கள் தண்டிக்கப்படுபவர் எனும் நிலை சுட்டப்படுகின்றது.

ஔவை முதாட்டியின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை என்பன ஒரு மனிதன் எத்தகைய மனிதத்தன்மையுடன் வாழ வேண்டும் என சுட்டுகின்றது. திருக்குறள் எனும் இலக்கியம் சமண மதத்திற்கேயுரியதாயினும் இந்துக்கள் அதன் கருத்துக்களை தமக்கே உரியதாக எண்ணி வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பயன்பாட்டு நெறிமுறை.

இந் நெறிமுறைக்கும் இந்து மதத்திற்கும் ஓராயிரம் தொடர்புகளை எடுத்துக்காட்டலாம். ஆம் இது மனித விருப்பம், மனித நிலை சம்பந்தப்பட்டதாக அமைகின்றது. என மெய்யியல் சுட்டுகின்றது. இது மனிதனின் அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கின்ற நன்நெறி தன்மையாக கருதப்படுகின்றது. இந்நன்நெறியினை துலங்குகின்றது. இன்னும் எத்தனையே விடயங்கள் சுட்டிக் காட்டலாம். இந்து மக்கள் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர்.

01. அதிகாலை துயிலெழல்- பிராமணர்கள் சந்தியாவத்னம்.
02. சூரிய நமஸ்காரம்
03. சிவசின்னங்கள் தரித்தல்
04. பெற்றோரை வணங்குதல்
05. இறை தொண்டாற்றுதல்
06. பிற உயிர்களுக்கு அன்பு பாராட்டுதல்
07. விரதமிருத்தல்
08. பண்டிகைகள் கொண்டாடுதல்
09. சடங்குகள் ஆற்றுதல்
10. அறம், பொருள், இன்பம், வீடு என சரிவர வாழ்ந்து முத்தி இன்பம் பெறல் எனும் தன்மையினை அடைதல் போன்ற நன்நெறிகளை இந்த மதம் கடைப்பிடிக்கின்றது.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

எனும் திருமந்திரப் பாடல்தான் இந்து மதம் நன்நெறியின் சாரமாய் விளங்குவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'
ஆலயம் தொழுவது சாலவும் நன்று எனக் கூறுவது இந்து மதமாகும்.

அறன் கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும் பிறன் கடைச் செலாஅச் செல்வமும் இரண்டு பொருளின் ஆகும். (அகம்- பாடல்- 155- வரி 1-3) எனும் பாடல் இல்லற வாழ்வில் அறத்தினைக் கடைப்பிடிக்க வேண்டும். என்பதே இதனை இந்து மதம் நன்கு விளக்கி நிற்கின்றது.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்
அன்பே சிவமானது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

(திருமந்திரம்- பாடல்- 270 இத்தகைய அன்பு நிலையினைக் கற்றுத் தருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இந்து மதம். அதற்கு இந்து மதத்தின் இறைவர்களைச் சாட்சியாககொண்டு வருகின்றனர்.

பன்றிக்குட்டிகளுக்கு பால் கொடுத்தமை.

தாயாய் வந்து பிரசவம் பார்த்தமை.

வைகை ஆற்றைப் பெருக்கெடுக்கச் செய்தமை.

எனும் பல சம்பவங்கள் சுட்டிக்காட்டத் தக்கது.

பண்டிகைக் கொண்டாட்டங்களின் போது ஏனையோருக்கு பகிர்ந்தளிக்கும் நன்நெறி

4. விளக்க நெறிமுறை.

இந் நெறி முறையானது தர்க்க ரீதியுடன் தொடர் படுகின்றது. அதாவது மதம் சார்பாகக் கடைப்பிடிக்கின்ற அதே போல் தினமும் ஆற்றுகின்ற செய்கைகளுக்கு அர்த்தம் ஏதேனும் உண்டா? என்பதுவும் விஞ்ஞான ரீதியில் அது அதைச் செய்கின்றவருக்கும், சமூகத்துக்கும் பயனுடையதா? என்பதுவுமே ஆகும். இத்தன்மையினைப் பெறுத்த வரை இந்து மதம் அற்புத மதம் என்றே எண்ணத் தோன்றுகின்றது. எமது எண்ணத் தோன்றுகின்றது. எமது முன்னோர்கள் கடைப்பிடித்த கோட்பாடு நம்பிக்கை, ஆசாரம் என்பன மூடநம்பிக்கை என கணிக்கப்பட்டாலும் அவை அனைத்தும் விஞ்ஞான விளக்கத்துடன் ஒத்துப் போகின்ற தன்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. அதனை சில உதாரணங்கள் மூலம் சுட்டிக் காட்டின்

1. அதிகாலை சூரிய வழிபாடு

விடியற் காலையில் சூரியனில் இருந்து வருகின்ற சூரிய கதிர்கள் கண்களுக்கு நல்லது அத்துடன் விற்றமின் D கிடைப்பதற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் காரணமாகின்றது.

2. கை கூப்பி வணங்குதல்

இதன் மூலம் இருகைகளைளும் ஒன்று சேர்க்கின்றோம். இங்கே அழுத்தம் ஏற்பட்டு ஞாபக சக்தி அதிகரிக்கின்றது.

3. தாலி, பொட்டு, மெட்டி என்பன அணிதல்

குறித்து முறையே தாலி அக்காலத்தில் மஞ்சல் வைத்துக் கட்டப்படுவது அது பெண்களுக்கு கிருமி நாசினியாகச் செயற்பட மெட்டியானது நரம்பு, கர்ப்பபை, இதயம் என்பவற்றுக்கு நேரடியாகச் செல்வதாலும் கர்ப்பப்பை வலுவடைந்து மாதவிடாய் இரத்த ஓட்டத்தை சீராக்கவும் அணியப்படுகின்றது. பொட்டு வைக்கின்ற இடம் ஆக்ஞா இருக்கும் இடம் இதனால் உடலின் ஆற்றல் திறன் இழக்காமல் புத்தி ஒரு நிலைப்படுகின்றது.

4. துளசி வழிபாடு

துளசி உயர்ந்த மருத்துவ குணமுடையது. அதனை சுற்றி வழிபடும் போது அதிலிருந்து கிடைக்க பெறும் வளி எமது சுவாசத்தினை சுத்திகரிக்கும். அத்துடன் அத் துளசி செடி அழிக்ககூடாது என்பதற்காகவும் பாதுகாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தரையில் அமர்ந்து வாழையிலையில் உண்பது

தரையில் அமரும் போது நாம் சுகாசன தோரனை அமர்கின்றோம். இது செரிமானத்தை அதிகரிக்கின்றது.

6. மருதாணி அணிதல்

மருதாணி மூலிகையாகும். இது திருமண நிகழ்வின் போது ஆற்றப்படுகின்ற சடங்காக ஏன் அமைகின்றது என்றால், திருமணத்திற்காகப் போகின்ற பெண் மிகவும் மன அழுத்தத்துடன் இருக்கின்ற பெண்ணுக்கு இதனை இடுவதினால் நரம்புகள் குளிர்வடைந்து இலகுவான தன்மையினை அடைகின்ற தன்மைக்காக.

7. காது குத்துதல், மொட்டையடித்தல்

குழந்தையாக இருக்கும் போதே ஆண், பெண் என இருபாலருக்கும் காது குத்தும் பழக்கம் இந்துக்களுடன் இணைந்தது இவ்வாறு செய்வதனால் மன அமைதி கிட்டும் ஆண்பிள்ளைகளுக்கு குடலிறக்கம் ஏற்படுவது தடுக்கப்படும், பெண் பிள்ளைகளுக்கு மாதவிடாய் சுழற்சி சீராக இருக்கும்.

8. விரதமிருத்தல்

விரதமிருப்பதன் மூலம் செரிமான மண்டலம் சீராய் இயங்கும், அனுசேபம் அதிகரிக்கும் பெரும்பாண்மையாக இந்துப் பெண்களே இதனைக் கடைப் பிடிக்கின்றனர். இதனால்தான் ஆண்களை விட பெண்கள் நீண்ட ஆயுளுடன் இருக்கின்றனர்.

9. ஈமச் சடங்கு முடிந்த பின் தலைகுளித்தல்

இது மிகவும் முக்கியமான கடப்பாடாகக் கருதினர். இதன் உண்மை இறந்தவரது உடலில் நுண்ணுயிர்கள் இருப்பின் அது இங்கு கலந்து கொண்டவர்களைக் பாதிக்கக் கூடாது என்பதற்காகவும் இறந்தவருக்காய் கவலை கொண்டு மன அழுத்ததுடன் இருக்கும் நபர்கள் நீரினை தலையில் ஊற்றும் போது மன அழுத்தம் நீங்கப் பெறுவதற்காகவும் இது கடைப்பிடிக்கப்படுகின்றது.

10. வடக்கில் தலை வைத்து படுக்க கூடாது.

இது மூடநம்பிக்கையாகத் திகழ்ந்தாலும், இதன் விஞ்ஞான பின்னனி வடக்கு வடதுருவம் இங்கே எமது தலை காந்தமாக செயற்படும். பூமியின் வடதுருவமும், உடலின் வடதுருவமும் ஒன்றோடு ஒன்று செயற்படத் தொடங்கினால் இரத்த ஓட்டம் பாதிப்படையும் அதனால் அவ்வாறு சொல்லப்படுகின்றது.

11. ஆரத்தி எடுத்தல்

இது விஷேட தினங்களில் மட்டும் ஆற்றுகின்ற தன்மை இந்துக்களிடம் உண்டு. இங்கு மஞ்சளையும், சுண்ணாம்பையும் கரைத்து அதன் மீது சூடமேற்றி குறித்த நபரை மூன்று முறை சுற்றுவது வழக்கம். இதன் மூலம் அந்த நபரை சுற்றியுள்ள கிருமிகள், நுண்ணங்கி, பற்றீரியா என்பது அழிந்து விடும். இதனை வாசலில் வைத்து எடுப்பதற்கு காரணம் . இவர்கள் வீட்டிற்கு வந்து விட்டால் பெரியவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் மீது தொற்றிவிடும் ஆதலால் வாசலில் வைத்தே எடுத்து விடும் வழக்கம் கைக்கொள்ளப்பட்டது.

12.. மஞ்சள் நீர் தெளித்தல்
சாணகம் கரைந்து தெளித்தல், மஞ்சள் தேய்த்துக் குளித்தல். எனும் அனைத்தும் கிருமிகளை விரட்டுவதற்காக ஆற்றப்பட்ட நிகழ்வுகள் ஆகும்.

13. ஆலயம் தொழுவது, மணியோசை கேட்டல், அபிஷேக வழிபாடு, சங்கு ஊதுதல்.
இவையணைத்தும் பல தரப்பட்ட நன்மைகளை உடலுக்கும் மனத்திற்கும் அளிப்பது என்பது எமக்கு தெரியாத உண்மையாகும். ஆலயத்தினை வழிபடும் போது மூலஸ்தான வழிபாட்டில் மூலஸ்தான விக்கிரக காந்த அலை சக்திகள் எமக்கு ஆற்றல் திறனை அதிகரிக்கின்றது. மும் முறை குட்டுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பது எமது நரம்பு மண்டலத்துடன் தொடர்பு பட்டு எண்ணற்ற பலன்களைக் கொடுக்கின்றது.

மணியோசையான மூளையின் அறிவாற்றால் தன்மையினை அதிகரிக்கின்றது. காரணம் அது கட்மியம், நாகம், ஈயம், தாமிரம் நிக்கல், எனும் உலேக கலவையினால் ஆக்கப்பட்ட தன்மையாகும்.

அபிஷேக வழிபாட்டின் போது மூலிகைகள் அதில் கலக்கப்படுகின்றன. இதனை பக்தர்களுக்கு கொடுக்கும் போது அவர்களாது உடல் சுத்திகரிக்கப்படும். சளி, பித்தம் போன்றவை நீங்கும். சஙகு ஊதும் போது மூச்சு சீராகுவதோடு நுரையீரால் சீராகச் செயற்படும். சங்குகளிலிருந்து வெளியேறும் காற்று கிருமிகளை அழிக்க வல்லது.

14. அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம்.
இவ் வழிபாட்டின் மூலம் தசைநார்கள், எலும்புகளிலுள்ள மூட்டுக்கள் என்பன வலுவடையும். பெண்களின் கர்ப்பப் பையிலுள்ள அடைப்பு நீங்கும் குழந்தைப் பேறு கிட்டும் வாய்ப்பு அதிகரிக்கும்.

15. கோபுர தரிசனம்.
'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என பெரியவர்கள் ஏன் கூறினார்கள்.எனும் காரணம் தெரிந்தால் வியந்து போய் விடுவீர்கள். கோபுரத்தில் ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசம் இருக்கும். இக் கலசமானது கந்த அலைகளை ஈர்க்கும் தன்மை கொண்டது. இதனால் இடி, மின்னலால் தாக்கமடையாது இதனால் தான் கோவில்லா ஊரின் குடியிருக்க வேண்டாம் என்று கூறினார்கள் போலும் இங்கே கலசத்துள் வரகு நிரப்பப்படும். இத்தானியம் 12 வருடத்தின் பின் கெட்டுவிடும். அதனால் தான் 12 வருடத்திற் கொருமுறை கும்பாபிஷேகம் எனும் குடமுழுக்கு ஆற்றப்படுகின்றது. இது வணங்குகின்றவர்களுக்கு காந்த அலை சக்தியினை கொடுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. திருநீறு, உருத்திராக்கம் அணிதல்.
திருநீறு கிருமிகளை அழிக்கின்ற அதே வேளை உடலில் மிகையாக இருக்கின்ற நீரினை அகத்துறிஞ்சும் தன்மை வாய்க்க பெற்றது. இரவில் தூங்கும் முன் இதனை அணிவது இந்துக்களது மரபு, இது அவர்கள் தூங்கி எழும் வரை கண்களுக்கு புலப்படாத பல்லாயிரங் கோடி கிருமிகளிடமிருந்து பாதுகாப்பை வழங்குகின்றது என்பது விஞ்ஞான விளக்கம்.

உருத்திராக்கம் அணிவதால் மன அழுத்தம் குறையும், மூளையின் இரத்த ஓட்டம் சீராகும் காரணம் காந்த முனைகளின் அணுக்க நிலையே ஆகும்.

17. மார்கழி மாத வழிபாடு, கோலமிட்டு, சாணம் வைத்தல்
மார்கழி மாதத்தில் அதிகாலையில் ஓசோன் படலம் வழியாக ஆரோக்கியமான காற்றும் பூமியில் இறங்குகின்றது. இது வியாதிகளை கட்டுப்படுத்தி உடல் நலனை அதிகரிக்கும். இதனை வாய் வழியே கூறின் மக்கள் கடைப்பிடிக்க மாட்டார்கள் என்று திருவெம்பாவை விரதத்தின் புண்ணிய மாதமாக இது காணிக்கப்படுகின்றது. அதனால் தான் இக் காலத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி திருவெம்பாவையினை திருவீதிகளில் பாடுவது வழக்கம்.(துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இன்று வரை ஆற்றப்படுகின்றது) கோலமிட்டு சாணம் வைக்கும் போது 80 ஓட்சிசனும் 20 கரியமில வாயும் வெளிப்படும் விஷவாயுவான காபனீரொக்சைட்டை விரட்டி ஓட்சிசனை உடலில் ஏற்றுகின்றது. மாட்டுச் சாணம் இங்கு கிருமி நாசினியாகச் செயற்பட்டு நம் வீட்டைச் சுற்றியிருக்கின்ற பக்ரீறியாக்களை அழிந்து விடும்.

இவ்வாறு எத்தனையோ விதமான விளக்க நெறிமுறைகளால் கொடுத்துக் கொண்டே போகலாம். நான் தொட்டுக் காட்டியது ஒரு சில காரணங்களே. அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது சிதம்பர நடராசரை வைத்து நாம் கூறுகின்ற விளக்கம் இது பெருவிரலில் உலகம் தாங்கியமைக்கு எடுத்துக் காட்டு. அச்சிலையினை இன்று விஞ்ஞான விளக்கத்துடன் இணைந்து வியந்து நிற்கின்றது விஞ்ஞான உலகம்.

2020 ஆம் ஆண்டில் கொரோனா எனும் கொடிய கிருமியால் பீதி கொண்டிருந்தாலும் இந்துக்களது வழமையான செயற்பாட்டால் கொரோனாவை அண்டவிடாது பாதுகாத்துக் கொண்டனர். இதன் மூலம் எத்தகைய நன்நெறி துலங்குகின்றது என வினா எழுப்பின் விடை கோடான கோடி என்பதே கிடைக்கப்பெறும் அதன்படி,

இந்துவாக வாழ்வதற்கு நாம் ஒவ்வொலுவரும் பெருமைப்பட வேண்டும் மேலே மெய்யியலுடன் சான்று காட்டி விளக்கிய நான் பொதுமைப் பாடான விடயங்களைச் சுட்டியே ஆக வேண்டும்.

01. உயரிய வேதம், ஆகமம், பன்னிருதிருமுறைகள் போன்ற அற்புத இலக்கியங்களைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. இயற்கையாய் தோன்றியவற்றை இறைவன் எனச் சுட்டியது மரம், கல், நீர், காற்று, குரங்கு (அனுமான்) நாய் (வைபிரவர்) தீ, நான்கு (வேதம்-உபநிடதம்) என அனைத்தும் கடவுள் எனக்கற்பித்தது.

03. கடவுள் இல்லை என்று கூறினாலும் குற்றவாளி எனச் சுட்டாத மதம், இந்த நாளில் இந்த நேரத்தில் கோயிலுக்கு செல்ல வேண்டும் என நிர்ப்பந்திக்கவோ, கட்டளையிடவே செய்யாத மதம் இத்தகைய மதக் குறியீட்டை அணிந்தாக வேண்டும் எனக் கூறாத மதம்

04. ஒட்டு மொத்த இந்து சமூகத்தினையும் கட்டுப்படுத்தும் மதத்தலைவர் அற்ற மதம்
05. பெண் ஆசை ஒழிக்க இராமாயணம்
06. மண் ஆசை ஒழிக்க மகாபாரதம்
07. கடமையின் முக்கியத்தை உணர்த்த பகவத்கீதை
08. அரசியலை நெறிபிறழாது நடாத்த அர்த்தசாஸ்திரம்
09. தாம்பத்தியத்தை நடாத்த- காமசாஸ்திரம்
10. மருத்துவத்திற்கு- ஆயுள்வேதம்-சித்த
11. கல்விக்கு- வேதக் கணிதம்
12. உடல் நன்மைக்கு- யோகா
13. கட்டுமானத்திற்கு (வீடு)- வாஸ்து சாத்திரம்
14. விண்ணியலுக்கு- கோள் கணிதம்
15. சகிப்புத்தன்மை, சமதானம், அன்பு, கொல்லாமை, புலால், மறுத்தல், ஜீவகாருண்யம்
16. ஆலயத்தின் மூலம் எண்ணிறைந்த தத்ததுவத்தையும் ஆற்றுகின்ற கிரியைகளின் விளக்கத்தில் முத்திநிலையினை காட்டிய அற்புத மதம் இந்து மதம் ஆகும்.

இந்து மத நன்நெறியின் சாரம் என விளக்குவதற்கு இந்த புனித நூலைக் காட்டலாமா? என யோசித்தால் அது முடியாத காரியம் ஏனெனில் பெரியோர்களும், முன்னோர்களும், புனித நூல் மட்டுமல்ல, நன்நெறியினைப் புகட்டுகின்ற பெட்டகங்களே எனலாம்.

வேதம், ஆகமம், உபநிடதம், பகவத்கீதை, மனுஸ்மிருதி, தேவார திருப்பதிகங்கள், மகாபாரதம், இராமயணம், எனும் ஒருசில நூல்களை மட்டும் தெளிவாக கற்று விட்டாலே போதும் அவன் எத்தகைய மானிடனாக இருந்தாலும், தன்னைத் தானே உணருகின்ற பக்குவ நிலையினைப் பெற்று விடுவான் என்பது திண்ணம் இவ் உண்மைக்கு நாம் புராணங்களிலிருந்து சான்று காட்டுவதனைத் தவிர்த்து எமக்கு ஓரிரு தலைமுறைக்கு முன் வாழ்ந்தவர்களையே சான்றாகக் காட்டலாம்: சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், இராமகிருஸ்ணர், சாரதாதேவி, யோகர் சுவாமிகள், வள்ளலார், நாவலர் பெருமான், அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி என்போர் யாராலும் மறுக்க முடியாத உதாரண புருவர்களாவார். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருமனிதன் எவ்வாறு இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் திருந்தி வாழ்வதற்கு சந்தர்ப்பமும் அறிவுரையும் வாழ்வின் பயணத்தோடு விளக்குவது இந்து மதம் என்பதற்கு கவிப் பேரரசர் கண்ணதாசன் அவர்கள் எழுதிய அர்த்தமுள்ள இந்து மதம் என்பது சான்று பகர்கின்றது.

எனவே நிறைவாக நோக்கின் நன்நெறியின் சாரமாக இந்து மதம் விளங்குகின்றது. என நாம் வரையறை செய்வது தவறுதலானதாகும். ஏனெனில் இந்து மதம் என்பது நன்னெறியின் கருவூலமாகும்.

இந்து மதம் தான் நன்நெறி, நன்நெறி தான் இந்து மதம் என உணர்ந்து ஓர் நல்ல இந்துவாய் வாழ்வோமாக.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

(பன்னிரண்டாம் திருமுறை 24 காரைக்காலம்மையார் புராணம்- பாடல்-60)

ஒட்டு மொத்த நன்னெறியின் கருவூலம் பெரியபுராணம் என்பது சிந்திக்கத்தக்கது.

## அழுக்காறு

அழுக்காறாவது பிறருடைய கல்வி செல்வம் முதலியவற்றைக் கண்டு பொறாமையடைதல். பொறாமையுடையவன் தன்னுடைய துன்பத்துக்குத் தானே காரணனாகின்றான். அக்கினியினாலே பதர் எரிவது போலப் பொறாமையினாலே மனம் ஏரிகின்றது. ஆதலினாலே பொறாமை யுடையவனுக்குக் கேடு விளைத்தற்கு வேறு பகைவர் வேண்டாம். அப் பொறாமை ஒன்றே போதும்.

பொறாமையுடையவனுடைய மனசிலே ஒருபோதும் இன்பமும் அமைவும் உண்டாகா. பொறாமையாகிய துர்க்குணம் மனிதனுக்கு இயல்பாகும். அது தோன்றும்பொழுதே அறிவாகிய கருவியினால் அதைக் களைந்துவிடல் வேண்டும். களைந்து விட்டால் அவன் மனசிலே துன்பம் நீங்க இன்பம் விளையும். பொறாமையுடயவனிடத்தே சீதேவி நீங்க, மூதேவி குடிபுகுவள். பொறாமையானது தன்னையுடையவனுக்கு இன்மையிலே செல்வத்தையும் புகழையுங் கெடுத்து, எல்லாப் பாவங்களையும் விளைவித்து, அவனை மறுமையிலே நகரத்திற் செலுத்திவிடும்.

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வர ஆலய மகோற்சவ காட்சிகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமகள் அழுத்தகம். சுன்னாகம். தொ.பே.: 021 224 4510

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org